# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.

1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone: No. 300.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு ஆவணி மாதம் 8ந்- திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 30-ம் இலக்கம்


## சுதேச வர்த்தமானம்

### வானொலிப் பேச்சு

இலங்கை வானொலித் தமிழ்ப்பிரிவில் நாளை 9-8-57 வெள்ளிக்கிழமை மாலை 7-15 முதல் 7-30 மணிவரை நாக்களி, கத்தோலிக்கதமிழ் உயர்தரப்பாடசாலை ஆசிரியர் திரு. வீ.எஸ். பிள்ளையவர்கள் "தலைவிலு" என்பதுபற்றி ஒருபேச்சு நிகழ்த்துவார்.

### தாய்லாந்திலிருந்து அரிசி

இன்னும் இரண்டொருதினங்களில் தாய்லாந்திலிருந்து (சீயம்) 7,500 தொன் அரிசி இலங்கைக்குக் கப்பலில் ஏற்றப்படவிருக்கிறது. தாய்லாந்திலிருந்து இலங்கை 20,000 தொன் அரிசி வாங்கவிருந்தது. ஆனால், தற்சமையம் அந்நாட்டிலே அரிசித்தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் 7,500 தொன்னுக்குமேல் வாங்கமுடியாமற் போய்விட்டது.

### வெங்காய உத்தரவாதவிலை

வெங்காய உத்தரவாத விலைத்திட்டம் 1958-ம்ஆண்டின் இறுதிவரை நீடித்திருக்க மந்திரி சம்மதித்துள்ளாரென உணவு-விவசாய மந்திரிகாரியாலயம் அறிவித்திருக்கிறது. வடபகுதி விவசாயஉற்பத்திக் கூட்டுறவுச்சங்கத்துக்கு இச்செய்தி உணவு-விவசாய மந்திரிகாரியாலய நிரந்தாகாரியதரிசியால் அறிவிக்கப்பட்டுள்ளது. வடபகுதியிலே வெங்காயம்செய்கைபண்ணுவோருக்கு இது மகிழ்ச்சியைக்கொடுத்திருக்கிறது.

### பீடித் தொழிற்சாலை

கரைச்சிப்பகுதியிலே உருத்திரபுரத்தில் பரீட்சார்த்தமாகச் செய்கைபண்ணப்பெற்ற பீடிப்புகையிலை உற்பத்தியில் எதிர்பார்த்ததிலும் அதிகபலன் ஏற்பட்டிருப்பதால் பீடித்தொழிற்சாலைஒன்றைக் [...]ப்பாயில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக மாகாண அதிபர் எம். ஸ்ரீகந்தா அவர்கள் தெரிவித்திருக்கின்றார். இதுவிஷயமாய்ப் பயிற்சிபெற்ற ஓர் ஆசிரியரை வரவழைத்து, இத்தொழிலில் பலரையும் பயிற்றியெடுப்பதே தற்போதுள்ள முதலாவது நோக்கமாகும்.

### முதலாவது சீனித்தொழிற்சாலை

கல்லோயாப் பள்ளத்தாக்கிலே சீனித்தொழிற்சாலைஒன்றை அமைப்பதற்குக் கல்லோயா அபிவிருத்திச்சபை சென்ற 1-ந்திகதி ஒப்பந்தமொன்று செய்திருக்கிறது. மிர்லீஸ் வாட்சன் கம்மென்ற ஸ்கொத்திலாந்த ஸ்தாபனம் இலங்கையிலுள்ள தனதுஏஜென்றான பிறவுண் அண்ட்கம்பெனிமூலம் இந்தச்சீனித்தொழிற்சாலையை அமைக்கவிருக்கிறது. 1959-ம் ஆண்டு சித்திரைமாதம்வரையிலே யந்திரங்கள் பொருத்தப்பட்டு, அவ்வாண்டின்மத்தியிலே இத்தொழிற்சாலையில் சீனிசெய்யப்படும். ஏற்கனவே 600 ஏக்கர் காணியில் கரும்புபயிரிடப்பட்டுள்ளது. அடுத்தவருடம் 3,800 ஏக்கர் காணியில் அதுபயிரிடப்படும். இந்தச் சீனித்தொழிற்சாலையில் வருடம்ஒன்றுக்கு 30,000 தொன் சீனிசெய்யப்படும். வருடம்ஒன்றுக்கு இலங்கைக்குத் தேவைப்படுஞ் சீனி 1,30,000 தொன்.

### வானொலியில் கத்தோலிக்கநிகழ்ச்சி

திரு. அருளானந்தம் யேசுதாசன் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஓர்கத்தோலிக்கநிகழ்ச்சி இலங்கைவானொலித் தேசியஒலிபரப்பில் 11-8-57 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 10 மணிவரை நடக்கவிருக்கிறது. இதில் "கத்தோலிக்கரும் தமிழும" என்ற ஒரு பேச்சும், திரு. 'கோசுதா' எழுதிய "மனமாற்றம்" என்ற நாடகமும நடைபெறவிருக்கின்றன. பிரபல வானொலி நாடக நடிகர்கள் இதிலே பங்குபற்றுவார்கள். இனிய கத்தோலிக்கபாடல்களையும் கேட்கலாம்.

### அந்தந்த மொழியிலே பதில்

அழுத்துகாமவீதிய பட்டினசபையின் மாதாந்தகூட்டம் சென்றவாரம் நடைபெற்றபோது, அதிலே எந்தெந்தமொழிகளில் சபைக்காரியாலயத்துக்குக் கடிதங்கள் வருகின்றனவோ அந்தந்த மொழிகளிலேயே அவற்றிற்குப் பதில்கள் அனுப்பப்பட வேண்டுமென்றும், சகலஅறிவித்தல்களும தமிழ், சிங்களம், ஆங்கிலமாகிய மூன்றுமொழிகளிலும் வெளியிடப்பட வேண்டுமென்றும் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஒன்று ஏகமனதாக அரங்கேறியுள்ளது.

### அரிசி நிறுத்து விற்கப்படும்

அடுத்தவருடமுதல் இலங்கைமுழுவதிலும் அரிசியை நிறுத்துவிற்க உணவு மந்திரிகாரியாலயம் தீர்மானித்திருக்கிறது. இதற்கென்று தராசுபடிகள் வாங்குவதற்கு அதிகாரமளிக்குமாறு உணவுக்கமிஷனர் பொக்ஷகாரியாலயத்துக்கு ஏற்கனவே விண்ணப்பஞ் செய்துள்ளார். சீனு, பர்மாவாகியநாடுகளிலிருந்து தருவிக்கப்படும் அரிசியைத் திரும்பஅளந்து சாக்குகளில் போடுவதற்கு ஏற்படுஞ்செலவைத் தவிர்க்கவும், அரிசி குறையும்போது அதற்குப் பொறுப்பானவரைத்தேடிப் பிடிக்கவுமாகவே அவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் தற்போது அரிசியைநிறுத்துவாங்கி அளந்துவிற்பதால் மேலதிகமான செலவேற்படுகின்றது.

### நகை அடகுபிடிக்கும் பிறநாட்டினர்

மூன்றுவருட விசாவுள்ள பிறநாட்டினருக்குத்தான் இனிமேல் நகை அடகுபிடிக்க லைசென்ஸ்வழங்கப்படும். அதனால் நகைஅடகுபிடிக்கும் அநேக இந்தியர்கள் இதையிட்டு மிகுந்த அதிருப்தி தெரிவித்துள்ளார்கள். இது நகை அடகுபிடிக்குந்தொழிலை இலங்கையர்மயமாக்க அரசாங்கம்எடுத்துள்ள முதல்நடவடிக்கை யாகுமென்று அவர்களில் பெரும்பாலார் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். தாங்கள் இப்பொழுது நகைகளை ஈடாகக்கொண்டு பணங்கொடுப்பதை நிறுத்திவிட்டதாகவும், ஏற்கனவே ஈட்டுக்கடனுக்குக்கொடுத்துள்ள பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதிலேயே இப்போதுதாங்கள் ஈடுபட்டிருப்பதாகவும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

### இலங்கையின் சனத்தொகை

சென்ற 1956-ம் ஆண்டின் இறுதியிலே இலங்கையின் சனத்தொகை 90 லட்சத்து 40ஆயிரம் பேராகும்; இத்தொகை 1956-ம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்ததைக்காட்டிலும் நூற்றுக்கு 2·5விகிதம் அதிகமானதென்று றெஜிஸ்ரூர்-ஜெனறலின் அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### இரண்டாவதுமொழியாக ஆங்கிலம்

பாடசாலைகளிலே ஆங்கிலத்தை இரண்டாவதுமொழியாகப் படிப்பிப்பதுசம்பந்தமாய்க் கொழும்புத்திட்டத்தின்கீழ் நிபுணர்ஒருவரின் உதவியைக் கல்விமந்திரி காரியாலயம் கேட்டிருக்கின்றது. அங்ஙனம், இரண்டாவதுமொழியாகப் படிப்பிக்கும்முறையைத் திருத்தியமைக்க உத்தேசித்துள்ளகல்விப்பகுதி தற்போதையமுறை பொருத்தமற்றதெனக் கருதுகிறது. அதனால் ஆசிரியர்களுக்குச் சிறந்தமுறையைப் படிப்பிக்கும்முகமாகவே நிபுணரின் உதவி வேண்டப்படுகிறது.

### சிகறெற் புகையிலைச் செய்கை

கரிசலிலே சென்ற 1-ந் திகதி நடைபெற்ற மன்னூர்ச் சிகறெற்புகையிலைத் தொழிலாளர் கூட்டுறவுச்சங்க பொதுக்கூட்டத்துக்கு மன்னூர்ப்பகுதிக் கூட்டுறவுஅபிவிர்த்தி அதிகாரியான திரு. வி.எஸ். பொன்னையா அவர்கள் தலைமைவகித்துப் பேசியபோது: "மன்னூர்த்தீவைப்பொறுத்தவரையிலே சிகறெற்புகையிலைச் செய்கையால் இங்குள்ள மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தமுடியும்; சிகறெற்புகையிலைச் செய்கையில் ஈடுபடுகிறவர்கள் ஏனைய காய்கறிவகைகளையும், கனிதரும்மரங்களையும் உண்டுபண்ணவேண்டும்" எனக்கூறலாயினர்.

### பதனீரும் சீனிஉற்பத்தியும்

பதனீரிலிருந்து சீனிஉற்பத்திசெய்யும்தொழிலை விருத்தியாக்கும் நோக்கமாகப் பதனீர்இறக்குகிறவர்கள் பெருந்தொகையாகவசிக்கும் வாரத்துப்பளை, உடுப்பிட்டிமுதலாம் இடங்களிலே தொழிற்சாலைகளை அமைக்க உத்தேசிக்கப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது. பதனீர் இறக்குகிறவர்களையே அங்கத்தவர்களாகக்கொண்டு கூட்டுறவு அடிப்படையிலே அரசாங்கத்தின் உதவியோடு இந்தத்தொழிற்சாலைகளை நடத்துகிறதானல் அவற்றிலிருந்து கிடைக்கின்ற வருமானம் தொழிலாளர்களையே சேர்வதாகும். அடுத்த பதனீர்ப்போகத்திலே முன்சொன்ன இடங்களில் இந்தத்தொழிற்சாலைகள் வேலைசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. தென்மராட்சியிலும் திருவடிநிலையம், கருகம்பானை, மந்துவில், சித்திரமேளிமுதலாமிடங்களிலும் இந்தத்தொழிற்சாலைகளைத்தொடக்கக் குடிசைக்கைத்தொழிற்பகுதி திட்டமிட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

### இல்லையேல் சத்தியாக்கிரகம்

பிரதமர் தமிழரசுக்கட்சியுடன் செய்துள்ளஒப்பந்தத்தை ஐப்பசிமாதம் 1-ந்திகதிக்குமுன் ஒழித்துவிடவேண்டும்; இல்லையேல் சத்தியாக்கிரகம் செய்வதெனச் சிங்களசங்கங்கள் பலவற்றைச்சேர்ந்த பிரதிநிதிகள் சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலேகூட்டங்கூடித் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தக்கூட்டத்திலே சிங்களஜாதிக சங்கமய, ஸ்ரீலங்கா சங்கசபா, சிங்கள பாஷாபெரமுனை, திரிசிங்களபெரமுனை ஆதியனஉட்படச் சிங்களஸ்தாபனங்கள் பலவற்றின்பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். சத்தியாக்கிரகதீர்மானத்தைக்கொண்டுவந்த திரு. எல். எச். மேத்தானந்தா பேசியபோது, இந்தஒப்பந்தத்தின்மூலம் சிங்களமக்களின் பிறப்புரிமைகளையும், அருஞ்செல்வங்களையும் பிரதமர் தமிழ்மக்களுக்கு விற்றுவிட்டாரெனக் குறிப்பிடலாயினர். சத்தியாக்கிரகத்திற்கான ஒழுங்குகளைச் செய்வதற்கென ஓர்கம்மிற்றிநியமிக்கப்பட்டு, சிங்களவர்களுக்குப் பிரதமர் பெரும்அநீதி செய்துவிட்டாராகவே, இதை அவர்களுக்குத்தெரிவிக்க ஆவணி 8-ந் திகதி முதல் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பிரசாரகூட்டங்கள் நடத்த வேண்டுமென்றும், சத்தியாக்கிரகஇயக்கத்துக்கு நிதிசேகரிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

### அனுபவமில்லாத தாதிகள்

தற்போது அரசினர்ஆஸ்பத்திரிகளிலே நோயாளரைப் பராமரிக்கும் சேவையில் தாதிமாராக அமர்த்தப்பட்டுள்ள 197 கன்னியாஸ்திரிமாருக்குப் பதிலாக உடனடியாக இலங்கையர்களான தாதிமாரை வேலைக்கமர்த்த முடியாதநிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. வருடந்தோறும் பயிற்சிபெற்று வெளியேறுகின்ற தாதிமாருக்குக் கன்னியாஸ்திரிமாருக்குள்ள அனுபவம்இல்லாதிருப்பதே அதற்குக்காரணமாகும். தாதிமாரான கன்னியாஸ்திரிகளை வேலைக்கமர்த்துவது சம்பந்தமாக அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுவதற்கென்று சுகாதாரமந்திரி நியமித்த சுகாதாரபகுதி அதிகாரிகளைக்கொண்ட கம்மிற்றிசமர்ப்பித்த அறிக்கையில் இவ்வாறுகூறப்பட்டிருக்கிறது. இலங்கைக்குவந்தபின் தாதிகளாகப் பயிற்சிபெற்ற கன்னியாஸ்திரிமார் 21 பேர் மாத்திரமேயென்றும், ஏனையவர்களெல்லாம் தாதித்தொழிலில் பூரண பயிற்சி பெற்றவர்களென்றும் சிலர் வைத்தியத்தொழிலிலேயே தராதரம் பெற்றவர்களென்றும் கம்மிற்றி தெரிவித்திருக்கிறது. கன்னியாஸ்திரிகளான தாதிமார்கள் இலங்கைக்கு முதன்முதலாக வந்தபொழுது கத்தோலிக்க திருச்சபை அதிகாரிகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையே செய்யப்பட்ட ஒப்பந்தபத்திரங்களையெல்லாம் தேடி எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இப்பத்திரங்கள் தேடியெடுக்கப்பட்டதும், கன்னியாஸ்திரிகளான தாதிமார் சம்பந்தமான அறிக்கைஒன்றை மந்திரிசபைக்குச் சுகாதாரமந்திரி சமர்ப்பிப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்கனி, கிழங்கு

(வைத்தியரத்தினம்: **கவிராஜர், ஸ்ரீ பிரதாபசிம்ஹர்**)

காய்கனி, கிழங்கு, வேர் ஆதியவைகளையே ஆகாரமாகக்கொண்டு நம் முன்னோர்கள் காலத்தைக் கழித்து வந்தனரென்று நூல்கள் வாயிலாக அறிகிறோம். அவர்கள் தாமாகவே ஏற்றுக்கொண்ட எளிமையில் இவ்வாகாரப்பொருள்கள் அவர்களது தேக-மன ஆரோக்கியத்தை எவ்வாறு பாதுகாத்துவந்தன என்பதை ஒருவாறு ஊகிக்கமுடியும். இந்தியாவில் இன்றுள்ள ஏழ்மைநிலையில் — இது நாமாக ஏற்றுக்கொண்டதல்ல — உடலுக்குப் புஷ்டிதரும் பொருள்களாக இன்று அறிஞர்களால் கருதப்படுபவைகளைப் பணம்கொடுத்துவாங்கி உபயோகிக்கஇயலாது. ஆகாரத்தில் ஏற்பட்டபற்றாக்குறை புத்தி, மேதை, பலம், புஷ்டி இவைகள்குன்றிய சிசுக்களையும், தாய்தந்தையராகிய நம்மையும், பிற்காலசந்ததியாரையும் கொடும் வியாதிகளுக்கு அடிமையாக்கிவருகிறது. இந்நிலையை நீடிக்கவிடக் கூடாது.

## வியாதிகளின் காரணம்

இக்காலத்திலே பல்வேறுஉருவங்களில் தெரியவரும் வியாதிகள் அனைத்தும் ஒருவாறுசரீரத்தின் இயற்கைச் சகிப்புத் தன்மைக்குறைவால் ஏற்படுபவை. இக்குறைவிற்குக்காரணம் தேகத்தின்இயற்கையை வளர்க்கஉதவும் ஆகாரவகைகளில் கவனம்செலுத்தாததே.

காய்கனி, கிழங்குவகைகளிற்பல நமது சரீரஆரோக்கியத்திற்கு மிக இன்றியமையாதவை. இவைகளிற்பல நமதுசரீரத்திலுள்ள அங்கங்களைப் போன்ற அமைப்பையே தங்கள்உருவிலும் தாங்கிவருகின்றன. வைத்தியன் மிகவும்ஊன்றிக்கவனித்தால் அந்தந்தக் கனி—காய் — கிழங்குவகைக்கும், சரீரத்தின் அங்கங்களுக்கும் உள்ளஒற்றுமையை நன்குகாணமுடியும். தேகத்தில்உள்ள ஒவ்வொரு உறுப்பிற்கும் தனித்தனியே பலமளிக்கக் கூடிய சிற்சிலகனி– காய்– கிழங்கு வகைகளைப்பற்றி நான் ஆராய்ந்ததில் பின்வருமாறு பலன்கள்காணப்பட்டன.

சரீரத்தின் ஒவ்வொரு அங்க அமைப்பையுங்கொண்டு அதேபோன்ற உருவஅமைப்புள்ள கனிமுதலியவைகளைக் கண்டு, அதற்கும் இதற்குமுள்ள தொடர்பை ஆராய்ந்தேன். பிரதானமாக நல்லபலன்தரக் கூடியவைகளாக அனுபவத்திலிருந்து எடுத்த சிலவற்றைமட்டும் கூறுகிறேன்.

## கண்ட பலன்கள்

**மூளை - அக்ரோடு:** அக்ரோட்டின் மேலுள்ள தடித்தஓடு மண்டையோட்டையும், உள்ளிருக்கும்பருப்பு மூளையின்அமைப்பையும் ஒத்திருக்கின்றன. இப்பருப்பு மூளையின்அமைப்பைத் திடப்படுத்திச் சக்தியைத் தூண்ட வல்லதாயிருக்கிறது. இதை வாதுமை, அல்வாபோன்ற இனிப்பான ஆகாரமாகச்செய்து உட்கொள்ள மூளைச்சக்தி அதிகமாவதைக் காணலாம். சரீரத்தைவளர்க்க இயற்கை அளிக்கும் பொருள்கள் அனைத்தும் இனிப்பான ஆகாரமாகத்தான் இருக்கின்றது. பால், நெய், கிழங்குகள் முதலியன இதற்குச்சான்றுகள். ஆதலால், அந்தந்த அங்கங்களைப் போஷிக்கும் ஆகாரவஸ்துக்களை இனிப்பான ஆகாரமாக்கிக் கொடுப்பதுதான் சிறந்தமுறையாகும்.

**கண்-வாதுமை:** கண்ணின் அமைப்பிற்கும் வாதாங்கொட்டைப் பருப்பிற்குமுள்ள உருவ ஒற்றுமை வியக்கத்தக்கது. வீரியவிருத்தியும், சரீரபுஷ்டியும் அளிப்பதன்மூலம் பார்வைத்தெளிவு — கண்ணின் அழகு. இவைகளை அளிப்பதில் வாதுமைநல்ல சக்திஉள்ளது.

**பற்கள் - மாதுளைமுத்துகள்:** இயற்கையான புளிப்பு, துவர்ப்பு, இனிப்புரசமுள்ள மாதுளைமுத்துகள் பற்களைக் கெட்டிப்படுத்துவதிலும், ஈறுகளைத் தன்னிறமாக்குவதிலும், அழகுபடுத்துவதிலும் நல்லகுணமளிக்கின்றன. பற்களின்ஆரோக்கியம்குன்றியவன் இதை அதிகஅளவில் உபயோகிப்பது நல்லது.

**ரொன்சில்-தாளிக்காய்:** ரொன்சில்என்றதொண்டையிலுள்ள கிரந்தி வீங்கினால் தொண்டையில் தாளிக்காயை அடக்கிக்கொண்டதுபோல் தான் இருக்கும். இதன் அழற்சியில் தாளிக்காயைத் தேனில் குழைத்து அதன்மேல்தடவிவர அது நல்லகுணமளிக்கின்றது. அடிக்கடி இதைச் செய்துவர ரொன்சில் நல்லபலம் பெறுகின்றது.

**சுவாசகோசங்கள்- திராட்சைக் கொத்து:** 2ரூத்தல் எடையுள்ள திராட்சைக்கொத்தை 2ரூத்தல்சர்க்கரைகரைத்த 2ரூத்தல் சலத்திலிட்டு ஒருசாடியிலே வெயிலில்வைத்து 15-வதுநாள் பிழிந்துவடிகட்டி உபயோகித்துவரச் சுவாசாசயம் நலம் பெறுகிறது.

**ஆமாசயம்- மாங்கனி:** பழமாகவும், காயாகவும் மாம்பழங்களை இவ்விதமே அதிகமாகஉபயோகித்துவர ஆமாசயம்பலம்பெறுகின்றது. நீண்டநாள்உபயோகத்திற்கு வைத்துக்கொள்ள மாம்பழப்பாகு, மாம்பழமுறப்பா, மாம்பழப்பானகம்போன்ற செயற்கைவழியில் அதைப்பாதுகாக்கலாம்.

**இருதயம்- அப்பிள்:** ஆவியில் வெந்த அப்பிள்பழத்துடன் பாலேடும், சர்க்கரையும்சேர்த்துச் சாப்பிட்டுவர இருதயம் மிகவும்நன்றாய்ப் பலப்படுகின்றது.

**குடல்- சரக்கொன்னை:** சரக்கொன்னைப் புளி 5 தோலா, தேன், நெய் தேவையானதுவிட்டுக் கிளறிக் கொடுத்துவரக் குடல்பலமடைகிறது. அதன் இயற்கைச்சக்தி திடப்படுகின்றது.

**அப்பென்டிக்ஸ்- புளி:** புளியம் பழத்தைப் பானமாக்கிச்சாப்பிட இங்குள்ள அழற்சிநீங்கி வலுவேற்படுகின்றது.

**கர்ப்பாசயம்- சுரைக்காய்:** பூசணிக்காயை அல்வாசெய்வதுபோன்று இதையும் அல்வாவாகத் தயார்செய்து ஆகாரமாகத் தினமும்சாப்பிடலாம். இதன்சாற்றைச் சர்பத்தாகத் தயார் செய்தும் சாப்பிடலாம். இதனால், கர்ப்பாசயத்தின் பலவீனம், நழுவுதல் போன்ற நோய்கள்வரா.

**எலும்புகள்- கரும்பு:** நீண்ட எலும்புகளைப் போஷிப்பதில் கரும்பிற்குச்சமம் வேறொன்றில்லை. இதை அப்படியே சுவைத்துச்சுவைத்துச் சாப்பிடவேண்டும்.

**தொடை- வாழைத்தண்டு:** இதன்சாற்றைப் பாகாக்கி ஏலம் போன்றவாசனைத்திரவியங்கள் சேர்த்துச்சாப்பிட, இது அழகானஉருவில் புஷ்டியாயிருக்கும்.

**கணுக்கால்- பீர்க்கு:** இதைத் தோல்நீக்கிச் சர்க்கரை சேர்த்து, வேகவைத்துக்கிளறி ஏலம்போன்ற வாசனைப்பொருள்சேர்த்துச் சாப்பிடக் கால்களுக்கு நல்லவலுவேற்படும்.

**கைகால்விரல் எலும்புகள்- மொச்சை:** கைகால்விரல்களின் பலத்திற்கும், அழகிற்கும் மொச்சையைவேகவைத்துச் சர்க்கரைசேர்த்து ஆகாரமாக்கி உட்கொள்ளவேண்டும்.



# பல தேசங்களில்

### அமெரிக்க செயற்கை உபகிரகம்

வருகிற கார்த்திகை மாதத்திலே அமெரிக்கா ஓர்சிறு செயற்கை உபகிரகத்தை ஆகாயத்திலே சுற்றவிட ஆயத்தப்படுகின்றது. பரீட்சார்த்தமாக ஆகாயத்தில் பறக்கவிடப்படவிருக்கும் இந்தச்சிறு உபகிரகத்தின்நிறை நான்கு ரூத்தலாகவே இருக்கும். அடுத்த வருடம் இருபத்தொன்றரை ரூத்தல் நிறையுள்ள செயற்கை உபகிரகமொன்று அனுப்பப்படும். இந்த உபகிரகங்களை ஆகாயத்தில் பறக்கச்செய்யும் பொறுப்புமுழுவதும் அமெரிக்க கடற்படையைச்சேர்ந்ததாகும் ரொக்கெற் குண்டுகளை அனுப்பும் யந்திரசாதனங்கள்மூலமே இந்தஉபகிரகங்கள் ஆகாயத்திற்கு அனுப்பிப் பறக்கவிடப்படும். வருகிறகார்த்திகை மாதம் பறக்கவிடப்படவிருக்கும் 'பேபி' உபகிரகம் அதிக நேரம் உலகத்தைச்சுற்றி வரமாட்டாதென நம்பப்படுகிறது. இதில் ஒரு வானொலி ஒலிபரப்புஞ் சாதனமும் இருக்கும்.

### செஞ்சீனு ஏமாற்றும் பிரயாணிகள்

மேல்நாடுகளிலிருந்து வருகின்ற சுற்றுப்பிரயாணிகள் நம்பக்கூடியவிதமாய்க் கிறீஸ்துவர்கள்மட்டில் தான் மிகுந்த கருணையாயும், உதாரகுணமாயும் நடந்துகொள்வதாகக் காட்டிக்கொள்ளச் செஞ்சீனஅரசாங்கம் வெகுவாக முயன்றபோதிலும் அங்கு கிறீஸ்துவர்கள் குரூரத்தனமாக இம்சித்துத் துன்புறுத்தப் படுவதாகச் செஞ்சீனுவிலிருந்து கிடைக்குஞ் செய்திகள் நன்கு தெரிவிக்கின்றன. அதனால், இந்தப்பிரயாணிகளில் அநேகர் ஏமாற்றப்படுகின்றார்கள். பீக்கிங் நகரிலே பிரசுரமாகும் "டெயிலி வோக்கர்" எனும் பத்திரிகையில் பிரசுரமான கட்டுரையொன்று சமீபத்திலே ஹொங்கோங் தீவிலிருக்கும் பிடெஸ் மிஷனரிய செய்திச்சேவை நிருபரின் கைப்படலாயிற்று. அதிலே சமயத்தின்மட்டில் சீனக்கம்யூனிஸ்த அரசாங்கம் கொண்டுள்ள அதிகாரபூர்வமான நோக்குநிலையை அவர் கண்டுகொள்ளலாயினர். "செஞ்சீனு ஓர் குறுகிய காலத்திலே சம்பூரணமான சோஷலிஸ்த அரசாங்கமொன்றை ஆக்குவதில் ஈடுபட்டிருக்கின்றது; நமது இன்பசுக வாழ்வு கடவுளிலாவது, அவரின் நன்மைத்தனத்திலாவது தங்கியிருக்கவில்லை; அல்லது புத்தரிலாவது, அவரின் கருணையிலாவது அது தங்கியிருக்கிறதா? சமயநம்பிக்கைகளையும், மூடபக்தியான கொள்கைகளையும் நாம் எவ்வாறு அடக்கியொழிக்கமுடியும்? அரசாங்க நிர்வாகபேனுவின் எழுத்தொன்றாலே இதனைச் சாதிக்க முடியாது; சமயம் முளைத்துவளருகின்ற அடிவேர்களை அழித்துவிடுவதே மகா முக்கியமான காரியமாகும்" என்று அந்தக் கட்டுரையிலே வரையப்பட்டுள்ளது.

* * *

● ஹங்கேரியின் தலைப்பட்டணமாகிய புடாபெஸ்ற்நகரிலே தொழிலாளர்களுக்கிடையில் அமைதியின்மையும், அதிருப்தியும் நிலவுவதாக ஆஸ்திரிய தலைநகரில் செய்திகள் கிடைத்திருக்கின்றன. மின்சார தொழிற்சாலையொன்றில் நியாயமற்றமுறையிலே சம்பளங்கள் வெட்டப்பட்டமையால் தான் தொழிலாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனராம். அமைதியைக் குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால் கடுந்தண்டனைக்குள்ளாகவேண்டி வருமென்று அரசாங்கம் அவர்களை எச்சரித்துள்ளதாம்.

● அமெரிக்க அரசாங்க மந்திரியான திரு. ஜோண் பொஸ்றர் டல்லெஸ் அவர்களின் புதல்வர்களில் ஒருவரும், ஓர்யேசுசபைக் குருவுமான வண. அவெரி டல்லெஸ் சுவாமியார் சமீபத்தில் ஜேர்மனிக்குச சென்றிருக்கின்றார். அங்கே இவர் முன்ஸ்றர்நகரில் சிலகாலம் தங்கியிருந்து விசேஷகல்வி கற்றுவருவார்.

● ரோமாபுரியிலே திருக்காரியாலய பரிபாலன திருச்சங்கத்தின் காரியதரிசியான கருதினால் பிசார்டோ ஆண்டவர் சென்ற ஆடிமாதம் 13-ந் திகதியன்று தமது 80-வது பிறந்தபெருநாளைக் கொண்டாடினார். தற்போது கருதினால்மார் திருச்சங்கத்திலுள்ள 59 கருதினால்மாருள்ளும் 80 வயது கண்ட பதினைந்தாவதுகருதினால் இவராவர்.

● பதினெட்டுவயதுடைய அக்ஸீன் ஜுவாறெஸ் நவாரோஎன்ற இளைஞர் ஆர்ஜென்ரீனுதேச கோர்டோபா சர்வகலாசாலையில் வைத்தியபட்டம் பெற்றிருக்கின்றார். அத்தேசத்திலே அதிகம் இளவயதுடைய டக்றர் இவர்தானும். பஞ்சு தண்ணீரை உறிஞ்சுவதுபோன்று இந்த இளைஞரும் அறிவை உறிஞ்சுகிறாரென்று அவருடைய வகுப்புமாணவர்கள் கூறுகின்றார்கள்.

● ஐக்கிய அமெரிக்க தேசத்திலே ஒவ்வோர் 760 பேருக்கும் ஒருடக்றர் மார் வீதம் இருந்துவருகின்றார்கள். ஆஸ்திரியாவிலோ 630 பேருக்கு ஒருவர்வீதம் டக்றர்மார் இருந்துவருகின்றனர். ஆனால், சூடான்நாடு ஒவ்வோர் 81,000 பேருக்கு ஒருவர் விகிதமும், இந்தோனீசியா ஒவ்வோர் 71,000 பேருக்கு ஒருவர்விகிதமும், இலங்கை ஒவ்வோர் 6,800 பேருக்கு ஒருவர் விகிதமும் டக்றர்மாரைக் கொண்டிருக்கின்றன.

● மலேரியாச் சுரத்தைக் குணமாக்கக்கூடிய புதிய மருந்து ஒன்று மெக்சிக்கோவிலே கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாய் அங்கிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. இது உலகமுழுவதிலுமுள்ள சுகாதார நிலையங்களுக்கும், டக்றர்மாருக்கும் வழங்கப்படுமாம். "பலுமெக்ஸ்" என அறியப்படுகின்ற இம்மருந்து நெடுங்கால ஆராய்ச்சிக்குப்பின் கண்டுபிடிக்கப்பட்டுச சென்றவருட இறுதிமுதல் தென் மெக்சிக்கோவிலே பரிசீலனை செய்யப்பட்டு வரலாயிற்று.

● மீன்பிடிப்பதற்கு மின்சாரவிளக்கைப் பயன்படுத்தும் நவீன முறை ஒன்றை ருஷியவிஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். பௌர்ணமி நிலவில்லாத இராநேரங்களிலே மின்சார விளக்குவெளிச்சத்தைக் கண்டால் பலவினமான மீன்களும் விளக்கைச்சுற்றி மொய்க்கின்றனவென்று அவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். கஸ்பியன் கடல், கருங்கடல் ஆதியவற்றிலே அவர்கள் நடத்திய பரிசோதனை மூலம் எல்லாஇனமீன்களும் பிடிக்கப்பட்டிருக்கின்றன.

● பாஸ்ரன் எடிசன் கம்பெனியார் தங்கள் வியாபாரவிளம்பர கடிகாரம் ஒன்றைச் செய்திருக்கின்றனர். 120 அடி அகலமும், 18 அடி உயரமுமான ஓர்பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும் இந்தக் கடிகாரமுகத்தின் குறுக்களவு 34 அடி 3 அங்குலம். நிமிஷக்கம்பியின் நீளம் 18 அடி 6 அங்குலம். மணித்தியாலக் கம்பியின் நீளம் 14 அடி 4 அங்குலம். இவைகள் முறையே 498 — 397 ரூத்தல் நிறையுடையன. இந்தக் கடிகாரத்தில 7,132 மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலாந்தின் புதிய சுதந்திரம்

"போலாந்திலே சமயசுதந்திரத்திற்கான சுகாத்தியநிலை வெகுவாகத் திருத்தமடைந்திருக்கிறது; போலிஷ்மக்களிடையே சமயப்பக்திப்போக்கு அநேகவருடங்களாய் இருந்துவந்ததைக் காட்டிலும்அதிகபலம்பொருந்தியதாய் இருக்கின்றது" என்று உத்தானநாதர்சபை அதிசிரேஷ்டரான ஓர்அமெரிக்கரும், போலாந்திலே.தமதுசபைக்குச்சேர்ந்த 18 விசாரணைப்பங்குகளிலே ஆறுவாரகாலம் சுற்றுப்பிரயாணஞ்செய்து திரும்பியவருமான வண. ஜோண் மிகஸ்சுவாமியார் ரோமாபுரியிலே தெரிவித்திருக்கின்றார். வார்சோ, கிருக்கோ, பொஸ்னன், ஜிடான்ஸ்க், ஜிடினியா முதலாம் நகர்கள் உட்படப் போலாந்தின்மிகப்பெரியநகரங்கள் பலவற்றைச் சுவாமியார் தரிசித்திருக்கின்றார்.

"எங்கெங்குமே ஆலயங்கள் மக்களால் தேங்கியிருக்கின்றன; சமயசம்பந்தமான பக்தியனுசாரங்களோ அனந்தம்; கோவில்களிலேகுருமார் எத்தகைய தடையுமின்றித் தன்னிஷ்டமாகப் போதகஞ்செய்கின்றனர். பாடசாலைகளிலே சமயகல்வி இஷ்டம்போலக் கற்பிக்கப்படுகின்றது; ஆனால், திருச்சபைஸ்தாபனங்கள் அனுமதிக்கப்பட்டில; உள்ளபடியே சுதந்திரமான கத்தோலிக்கஅச்சகம் அங்கில்லை; கத்தோலிக்க பிரசுரங்கள்சில வெளிவருகின்றனதான்; ஆனால், அவைகள் அரசாங்கத்தால் மிகவுங்கண்டிப்பாகக் காவல்செய்யப்படுகின்றன; அநேககுருமார் மிகவுங்கஷ்டநிலைமைகளில் தொண்டாற்றிவருகின்றனர்; ஒருதொகையானோர் சிலபகுதிகளிலே திவ்வியபூசை நிறைவேற்றுவதற்காக மிகவுங்கடுமையானகுளிர்ந்த சுகாத்தியத்தில் திறந்தவண்டிகளிலே நெடுந்தூரத்துக்குப் பிரயாணஞ்செய்யவேண்டியிருக்கின்றனர். ஏனையோர் வழமையான தங்கள்கடமைகளுடன் வாரம்ஒன்றுக்கு 35 மணித்தியாலங்களுக்குமேல் சமயபாடவகுப்புகளைப் படிப்பிப்பதில் செலவிடுகின்றனர்" என்று சுவாமியார் கூறுகின்றார்.

போலாந்தின் நிலைமைகள்பற்றித் தாம்கண்டவைகளைப்பற்றிச் சுவாமியார்கூறியது வருமாறு: "கடைசிமுறையாக 1948-ம் ஆண்டு நான்அங்குசென்றபோது இருந்ததைக்காட்டிலும் தற்போதுநிலைமைகள் பொதுவிலே மிகநன்ருயிருக்கின்றன. அப்போதுஅதிகாரிகள் பாங்கற்றவர்களும், மரியாதையில்லாதவர்களுமாய் இருந்தார்கள். நான்சென்றவிடமெல்லாம் அவர்களால் பின்தொடரப்பட்டுச் சென்றேன். இம்முறைஎனதுதரிசனை இன்பமாயிருந்தது. அந்நாட்டில் பிரவேசித்தநேரமுதல் அதைவிட்டு வெளிகொள்ளுகிறவரையிலே ஆசாரஉபசாரமாக நடத்தப்பட்டேன். எவருமே என்னைப்பின்தொடரவில்லை.போலிஷ்மக்களின் அறவொழுக்கம் மிகவுயர்ந்திருக்கிறது. எங்கெங்குமேபோலிஷ்மக்கள் திரு. கோமுல்காவைத் தலைமையாகக்கொண்டதும், ஸ்ராலினிஸ்தர்களை விரோதிப்பதுமான ஆட்சியை ஆர்வத்தோடு ஆதரிக்கின்றார்கள். சோவியற்ஆதிக்கத்தைக் கடுமையாகஎதிர்ப்பதிலே மக்கள் ஐக்கியப்பட்டு நிற்கிறார்கள். பத்திரிகைகள்தானும் பகிரங்கமாக ருஷியர்களைக் கண்டித்துவருகின்றன. போலிஷ்மக்கள் மனப்பாக்கியமாயும், வருகாலம்தங்களுக்கு மிகநல்லதாயிருக்குமென்ற மனநம்பிக்கையாயும் இருந்தபோதிலும் அவர்களின் உடல்நிலை மிகவும்கேவலமாய் இருக்கின்றது. வரக்கூடிய பசிபட்டினியையும் எதிர்நோக்கியிருக்கின்றார்கள். ஐக்கியஅமெரிக்கதேசம் போலாந்துக்கு அவசியம்உதவியளிக்க வேண்டியிருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து உதவிபோகாவிடில் என்னநடக்குமோஎன்றுதான்அஞ்சுகிறேன்."

## மத்தியகிழக்கும் கத்தோலிக்கரும்

மத்தியகிழக்கிலுள்ள அராபியநாடுகளிலும், இஸ்ருயேல்நாட்டிலும் தற்போது 11,31,888கத்தோலிக்கர் இருந்துவருகின்றார்கள். இவர்களில் ஏறக்குறைய அரைவாசிப்பேர் மத்தியகிழக்குப்பகுதியில் அதிகஞ்சிறியதான லெபனன்நாட்டில் வசித்திருந்தபோதிலும் சகலஅராபியநாடுகளிலும், இஸ்ருயேலிலும் கத்தோலிக்கர் சிறுபான்மையினராக இருந்துவருகின்றனர். மத்தியகிழக்குநாடுகளிலுள்ள கிறீஸ்துவர்களில் நான்கில்ஒருபங்குக்குச் சற்றேகுறைந்ததொகையினர் கத்தோலிக்கராயும், இரண்டு லட்சம்பேர் புறொட்டஸ்தாந்தராயும், 33லட்சம்பேருக்கு மேற்பட்டவர்கள் பிரிவினைச்சபைகளைச் சேர்ந்த கிறீஸ்தவர்களாயும் இருந்துவருகிறார்கள். மொத்தமாக அப்பகுதியிலுள்ள 5 கோடி மக்களிலும் கிறீஸ்துவர்கள் 9·3 விகிதமாயும், முஸ்லீம்கள் 86·3 விகிதமாயும், யூதர்கள்3·3 விகிதமாயும் இருக்கின்றார்கள்.

## சிறியபுஷ்பத்தின் தாய்தந்தையர்

சிக்காகோநகரிலுள்ள சிறியபுஷ்பத்தின் திருசேத்திரத்திலே சமீபத்தில்நடைபெற்ற அர்ச். சூசையப்பர் — அர்ச். தெரேசம்மாள் குடும்பநவநாள் பக்திமுயற்சிக்கு ஐக்கியஅமெரிக்கதேசம் முழுவதிலுமிருந்து சமுகமளித்த பல்லாயிரக்கணக்கானமக்கள் அர்ச். சின்னத்தெரேசம்மாளின் பெற்றோரான லூயிஸ் மாட்டீன் தம்பதிகளுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுவதையும் தங்கள்கருத்துகளில் ஒன்ருகக்கொண்டு விசேஷவிதமாக மன்ருடிக்கொண்டார்கள். சிறியபுஷ்பத்தின் தந்தையும்தாயும் முத்திப்பேறுபெற்றபட்டத்துக்கெனப் பிரான்சில் பேயோ-லிசியோ மேற்றிராணியாரான பிருன்கோயில் மரியேஆண்டவரால் தெரியப்பெற்றிருக்கின்றனர். பரிசுத்தஸ்தானத்துக்குச் சமர்ப்பிப்பதற்கென மேற்றிராசன நீதிமன்றம்ஒன்று சாட்சியங்களைத் தற்போதுஆராய்ந்துவருகிறது.

## புதியகத்தோலிக்க ஏள்பிரபு

இங்கிலாந்திலே சமீபத்தில் காலஞ்சென்ற ஆருவதுஏள்பிரபு நெல்சனின் சகோதரரான புதிய ஏள்பிரபுநெல்சன் இலங்கையிலுள்ள ஓர்பங்களாவிலே இளைப்பாற்றிவாழ்க்கை நடத்திவருகிறாரெனத் தெரியவருகிறது. இந்த ஏழாவது கத்தோலிக்க ஏள்பிரபுவாகிய ஹென்றி எட்வாட் யோசெவ்நெல்சன்அவர்களுக்குத் தற்சமையம்வயது 63. வைக்கவுண்ட் மேட்ரன், நைலின் பரோன்நெல்சன்என்ற பட்டங்களும் இவருக்குண்டு. 'கன்வே'என்றபிரித்தானிய யுத்தக்கப்பலில் ஓர்காலம் இவர் சேவைசெய்தார். தமது மூத்தசகோதரனைப்போன்று முதலாவதுஉலகயுத்தத்திலே ஆஸ்திறேலியசேனையில் சேவைசெய்தவர். இரண்டாவது உலகயுத்தத்திலே எண்ணெய்த்தாங்கிக் கப்பலொன்றில் இவர் ஓர்பீரங்கிப் படைவீரராய் இருந்துவந்தார். இவரின்கப்பல் கொழும்பில்நின்றபோது, சுகத்தாழ்வுகாரணமாக யுத்தசேவையிலிருந்து விலக்கப்படலாயினர். சிலகாலத்தின்பின் மாணவர்களைப் பயிற்றுதற்கென்று இந்தியசேனையில் சேர்ந்துகொண்டார். தமதுபுதியபதவியை வகிப்பதற்காக இவர்விரைவிலே இங்கிலாந்து செல்வாரெனத் தெரியவருகிறது.

## போலாந்தும் ஆத்மீகமறுமலர்ச்சியும்

போலாந்தை எவருமேகண்டு பாவிக்கத்தகும் ஓர்நல்லமுன்மாதிரிகையான கிறீஸ்துவநாடாகச் செய்வதற்காக அதன் திருச்சபைமேலதிகாரியான கருதினல் விசின்ஸ்கிஆண்டவர் புதியதிட்டம்ஒன்றை வகுத்திருக்கின்றார். அதன்பேரில் போலாந்ததிருச்சபையானது ஆத்மீகமறுமலர்ச்சிக்குரிய இயக்கம்ஒன்றைத் தொடக்கவிருக்கின்றது. அதிலே போலாந்தமக்கள்அனைவரும் சமூகநீதி, சகோதரத்துவநேச போக்கிலே வாழ்ந்துவருவார்கள். இந்தத்திட்டம் போலாந்துமனந்திரும்பிய ஆயிரமாம்ஆண்டாகிய 1966-ம்ஆண்டிலே உச்சநிலையடையத்தக்கதாக ஒன்பதுவருடநோவனைகளாக இருந்துவரும். அப்போது போலாந்தமக்கள் தீவிரமான செபப்படையணி ஒன்றின்மூலம் தங்கள்பிரச்சினைகளுக்கு ஓர்முடிவு கண்டுகொள்வார்கள். இந்தத்திட்டம் ஒன்பது விண்ணப்பங்களை அடக்கியதாய் வருடந்தோறும்ஒவ்வொன்ருக நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

## மேற்றிராணியாரும் தேவஅழைத்தலும்

"தேவஅழைத்தல்கள் அதிகரித்துவந்தபோதிலும் அவைகள் சனப்பெருக்கத்தின் அளவுக்குத் தக்கதாக இன்னுமேஅதிகரிக்கவில்லை; யுத்தம்முடிவடைந்தது முதல் மேற்றிராசனத்தின் சனத்தொகை நூற்றுக்கு 35 விகிதம் அதிகரித்திருக்கிறது; அதனுல் நாம் அதிகமான குருமாரைக் கொண்டிருக்க வேண்டும்; ஆகவே, தாய்மாரென்றமட்டில் உங்கள் புதல்வர்கள்மத்தியிலே தேவஅழைத்தல்களை ஊக்கப்படுத்திவருமாறு உங்களுக்கு மனுப்பண்ணிக்கொள்ளுகிறோம்; கன்னிகாவாழ்க்கைக்கான அழைத்தலைக் கொண்டுள்ள உங்கள்புதல்விகளையுமே திருச்சபை வேண்டிநிற்கின்றது; உங்கள் குடும்பவாழ்க்கையின் மகத்துவத்தையும், கத்தோலிக்ககுடும்பத்தின் சிறந்தமாதிரிகைகளையும் நிலைப்படுத்துங்கள்" என்று இங்கிலாந்திலே நொட்டிங்காம்மேற்றிராசன கத்தோலிக்க தாய்மார் ஐக்கியசங்கத்திலே மகாவந். எலிஸ்மேற்றிராணியார் கூறியிருக்கின்றார்.

## அரசியற்கட்சியின் புதியபோக்கு

ஆஸ்திரியநாட்டின்சோஷலிஸ்தகட்சியானது இதுவரை திருச்சபையை விரோதித்துவந்த அரசாங்ககட்சியாகும். ஆனால், அடுத்துவரும் பொதுத்தேர்தலுக்கு ஆயத்தமாய்க் கத்தோலிக்கரைக் கவர்ந்துகொள்ளலாமென்ற நம்பிக்கையின்பேரிலே தனதுவேதவிரோதஇயக்கத்தைக் கைவிட்டு, திருச்சபையுடன் நேசஉறவுகளை ஏற்படுத்திக்கொள்ள முனைகின்றது. இந்தக்கட்சியிலே கத்தோலிக்கர்சேர்ந்துகொள்ளத் திருச்சபைஇனிமேல் தடையாயிராது தாங்கள் செய்யக்கூடியதையெல்லாம் செய்யவேண்டுமென்று வீயென்னுநகர சோஷலிஸ்தர்களுக்கு அக்கட்சியின் புதியதலைவரானடக்றர்புறூனே பிற்றர்மான் தெரிவித்திருக்கின்றார். இதுவரை சோஷலிஸ்தகட்சியின் தலைவராயிருந்த டக்றர்அடல்வ் ஸ்கார்வ் சமீபத்திலே ஆஸ்திரியஜனுதிபதியாகத் தெரிவுசெய்யப்பெற்று, அரசியல்விஷயங்களில் ஊக்கமாகஈடுபட இயலாமற்போயினமையால் கத்தோலிக்கர்வேண்டிநிற்பவைகளை நிறைவேற்றுவதில் இருந்துவந்த பெரும்முட்டுக்கட்டை நீங்கிவிட்டதெனக் கருதப்படுகிறது.

## ஆர்ஜென்ரீன சர்வகலாசாலை

வேதவிரோதியான பெரோனின் கொடுங்கோன்மையாலே சீரழிந்துபோன ஆர்ஜென்ரீனுநாடு தற்போதுஒருவாறு சீரடைந்து, அங்கு கோர்டோபாநகரில் ஓர் கத்தோலிக்க சர்வகலாசாலை நிறுவப்பெற்று, அதில்மாணவர்கள் சேர்ந்து படிக்கத்தொடங்கியிருக்கிறார்கள். கடந்துபோன ஒருநூற்றுண்டுகாலத்திலே அந்நாட்டின் முதலாவது பிரத்தியேகசர்வகலாசாலை இதுவாகும். 1613-ம்ஆண்டு யேசுசபைக்குருமாரால் அடியிடப்பெற்றதும், ஆனால், 19-ம் நூற்றுண்டில் தேசீயமயமாக்கப்பட்டதுமான கோர்டோபா சர்வகலாசாலையிலிருந்து தள்ளப்பட்ட பேராசிரியர்களின் குழு ஒன்றுல் இந்தப்புதிய சர்வகலாசாலை திட்டமிடப்படலாயிற்று. கல்வி விஷயத்தில் பெரோன்தலையிடுவதை இவர்கள்ஆட்சேபித்து அச்சுறுத்தியமையாலே அவர் இவர்களையெல்லாம் அவர்கள்பதவியிலிருந்து ஒழித்துக்கட்டிவிடலாயினர். அந்நாட்டின் தற்காலிக அரசாங்க ஜனுதிபதியான திரு. அரம்புறுஅவர்களின் கட்டளையின்பேரிலே இந்தக்கத்தோலிக்க சர்வகலாசாலை சட்டமுறையாக அமைக்கப்பட்டுள்ளது.

---

**உன்பாடு துன்பமும், கவலையும் நிறைந்து, நீ செல்வழி முள்ளும் முரடும் நிறைந்து, அன்பர் கைலாகு தராராகில், ஆண்டவன் கை உன் அடைக்கலமாகும்.**

— ஓர்அறிஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணி மாதம்

**பொதுக்கருத்து:** தொழில்நுணுக்க முன்னேற்றம் மக்களிடையே தம் முயிர், பிறஉயிர்பற்றிய பொறுப் புணர்ச்சியைக் குறைக்கா திருக்க வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** ஆஸ்திரேலியாவில் மேற்படிப்புக்காக ஏற்படுத் தப்பட்ட கத்தோலிக்கஸ்தாபனங் களுக்காக மன்ருடிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்

1957-ம் ஆண்டு
ஆவணி மாதம் 8-ந் திகதி

## சமரச உடன்படிக்கையின் எதிரொலி

இலங்கைமுழுவதும் கடந்த சிலமாதங்களாகத் தமிழரசுக் கட்சிநடத்த உத்தேசித்திருந்த சத்தியாக்கிரகத்தைப் பற்றிய அச்சமே தலைகாட்டியிருந்தது. ஈற்றில், பிரதமருக்கும், தமிழரசுக்கட்சிக்குமிடையே ஏற்பட்டுள்ளஉடன்பாடு சத்தியாக்கிரக அச்சத்தைப்போக்கி, இந்நாட்டில் ஏற்பட்டிருந்த ஓர்பெரும் இரத்தக்களரியைத் தவிர்த்துவிட்டபடியால் பொதுவாக எங்குமே சந்தோஷமும், திருப்தியும் காணப்பட்டன. ஆயினும், பிரதமர் - செல்வநாயகம் உடன்பாடுவிஷயமாய்த் தமிழ்மக்களிடையே கருத்துவேற்றுமைகள் உள்ளனவென்பதைச் சென்ற சனி, ஞாயிறெனும் இரு தினங்களிலும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பகிரங்ககூட்டங்கள் எடுத்துக்காட்டி யுள்ளன. அங்ஙனம், இந்த உடன்பாட்டாலே தமிழ்மக்கள் கருத்துவேற்றுமைகள்காரணமாக இரண்டுபட்டுக் கொண்டிருக்க, சிங்கள மக்களிடையேயும் பண்டாரநாயகா - செல்வநாயகம் உடன்படிக்கைக்குப் பலமானஎதிர்ப்புகள் நடத்துவதற்கான ஆயத்தங்கள் நடைபெறத் தொடங்கியிருக்கின்றன. இந்த உடன்படிக்கையின் பலாபலன்களை விளக்கிக் கூறுவதற்காக ஐக்கியதேசீயக்கட்சியின் அவசரகூட்டம் ஒன்று நாளை நின்றுவரும் சனிக்கிழமை அக்கட்சியின் தற்காலிகதலைவரான திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையிலே நிகழவிருக்கின்றது. அதிலே அவர்எடுத்துக் கூறும் விளக்கங்கள் சிங்களவர்களின் கண்களைத் திறந்துவிடுமென்றும், உடன்படிக்கை சிங்களமக்களுக்கு எவ்விதம் துரோகஞ்செய்கிறது என்பதைவிளக்கி நாடுமுழுவதும் எதிர்ப்புக்கூட்டங்கள்நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு விட்டனவென்றும் செய்திபரந்திருக்கின்றது. கண்டியிலே பாஷாபெரமுனைகூட்டிய ஓர்விசேஷகூட்டத்திலே,“தமிழரசுக்கட்சித்தலைவர்களுக்கும், பிரதமருக்குமிடையே செய்யப்பட்ட உடன்படிக்கையானது இந்தநாட்டின்சனத்தொகையிலே நூற்றுக்கு 82 விகிதமான சிங்களமக்களைச் சிறுபான்மையினரான தமிழர்கள்முன் கைகட்டி, வாய்புதைத்து நிற்கும்படியாகச் செய்துவிட்டது” என்று ஓர்பிரேரணை நிறைவேற்றப்பட்டு, சிங்களசாகியத்துக்குப் பிரதமர் துரோகஞ்செய்துவிட்டார்; ஆகவே, உடன்படிக்கையிலிருந்து பிரதமர்உடனடியாக விலகவேண்டும்; அதிலிருந்து தனது கேள்விக்குச் செவிசாய்க்க அவர் தவறினல் நாடுமுழுவதும் ஹர்த்தால்அனுட்டிக்கச் சிங்களசமூகம் ஒரேமுகமாகத் தயாராகவேண்டுமென்றெலாம் முழக்கப்பட்டிருக்கிறது. சிங்கள ஜாதிகசங்கம், ஸ்ரீலங்கா சங்கசபா, சிங்களபாஷா பெரமுனை, திரிசிங்கள பெரமுனை ஆதியனஉட்படச் சிங்களஸ்தாபனங்கள் பலவற்றின் பிரதிநிதிகள் ஓர்மகாநாடுகூடித் தமிழரசுக்கட்சியுடன் செய்துள்ள உடன்படிக்கையைப் பிரதமர் வருகிறஐப்பசிமாதம் 1-ந் திகதிக்குமுன் ஒழித்துவிடவேண்டும்; அன்றேல் சத்தியாக்கிரகஞ் செய்வதெனத் தீர்மானித்திருக்கின்றூர்கள். தமிழரசுக் கட்சியுடன் செய்துகொண்ட இந்த உடன்படிக்கையின் விளைவாகச் சிங்களவரின் பிறப்புரிமைகளையும், அருஞ்செல்வங்களையும் தமிழருக்கு விற்றுவிட்டாரென்று திரு. எல். எச். மேத்தானந்தா அம்மகாநாட்டிலே முழங்கினூர். சிங்களவருக்குப் பிரதமர்பெரும் அநீதிசெய்துவிட்டதை அவர்களுக்குத் தெரிவிக்குமுகமாக இன்றுமுதல் நாட்டின்பல்வேறு பகுதிகளிலும் பிரசாரகூட்டங்கள்நடத்துவதென்றும் அம்மகாநாட்டிலே தீர்மானிக்கப்படலாயிற்று. இந்தநிலைமையிலே கண்டி நாட்டில்அடங்கிய மத்திய, சப்பிரகாம,வடமத்திய, வடமேல் மாகாணங்களைச்சேர்ந்த மக்களின்உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கமாகச் “சுதந்திர கண்டியஇராச்சிய கட்சி” என்ற நாமத்துடன் புதியதோர் அரசியற்கட்சி தோன்றியுள்ளது. இப்புதியகட்சிசம்பந்தமாய் விடுக்கப்பட்டுள்ள ஓர் துண்டுப்பிரசுரத்திலே, யு. என். பி. கட்சி இனிமேல் உயிர்பெற்றெழமாட்டாது; எம். ஈ. பி. கட்சி சகலவிதத்திலும் கண்டியர்களுக்குப் பாதகமே விளைத்துவருவதால் அவர்களின்உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியம்ஏற்பட்டுள்ளது; எம். ஈ. பி. என்ற போர்வையிலே கம்யூனிஸ்தர்கள் இலங்கையை ஓர்கம்யூனிஸ்த நாடாக்க முற்படுகின்றூர்கள்; இந்தஅரசாங்கம் செய்யுங்காரியங்களால் கண்டியர்கள் நாளாவட்டத்தில் சகலஉரிமைகளையும் இழந்துவிடுவார்கள் என்பனவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறுகப் பிரதமர்- தமிழரசுக்கட்சித் தலைவர்களின் சமரசஉடன்பாடு பலவிதமான எதிர்ப்புகளையும், ஆட்சேபனைகளையும் எழுப்பிவிட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே பிரதமர் பயந்து பின்வாங்குவாரா? அன்றேல் தாம்நினைத்ததை அஞ்சாது முன்வந்து சாதிப்பாரா? என்ற வினுக்கள்பிறப்பது ஆச்சரியமல்ல.



## சதாசகாயமாதா கோணம்

### சனிக்கிழமைச் சம்பவம்

ஒருகிராமத்தில் 16 வயதுநிரம்பாத ஒருஇளம்பெண் இருந்தாள். அவளுடையசீவியத்தில் ஒருபோதும்நடவாத ஒருவிசேஷசம்பவம் ஒருசனிக்கிழமை நடைபெற்றது. அதாவது, அன்று அவள் கிராமத்தின்கிணற்றடியில் மாடுகளுக்குத் தண்ணீர்வைத்துக்கொண்டிருந்தாள். அவள் தண்ணீர்அள்ளும் வாளியை எட்டிப்பிடிக்க எத்தனித்தபோது யாரோ அவளைக்கூப்பிடும்சப்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். புன்னகைபூத்தவதனத்துடன் ஒருஅலங்காரமானபெண்மணி தன்னண்டை அவளை வரும்படி கைகாட்டுவதைக் கண்டாள். அவளும் என்னசெய்வதெனத் தோன்றுது அவளுடையபாதத்தண்டை விழுந்தாள். அந்தநேரம் தான்பெரியசந்தோஷம் அனுபவிப்பதாக உணர்ந்தாள். கண்களை மேல்நோக்கிப்பார்த்தாள். பின்வரும்சொற்கள் அவள் காதிற்பட்டன. “என துநந்தாவனத்தில் நீயும்என்னுேடு எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டுமென விரும்புகிறேன். நீ ஒரு குருவானவரைக் கூப்பிடு. ஞானஸ்நானம்பெறு. பின்பு நான்உன்னைக் கூட்டிச்செல்வேன்.”

அந்தஇளம்பெண் தனதுகைகளால் அப்புனிதபெண்மணியைக் கட்டிப்பிடிக்க எத்தனிக்கவே அந்தமாது உடனே மாயமாய்மறைந்துவிட்டாள்.

காலந்தாழ்த்தாது அந்தப்பெண் அவ்வூர் உபதேசியாரிடம்போய் ஒருகுருவானவரை வரவழைக்கும்படி தாழ்மையாய்க்கேட்டாள்.

“நீ வேதக்காரியல்ல; அஞ்ஞானி. அதனுல், உனக்காகச் சுவாமியார்வரமாட்டார்” என்றூர்உபதேசியார்.

“தயவுசெய்து ஒருசுவாமியாரைக் கூப்பிடுங்கள். நான் ஞானஸ்நானம்பெற வேண்டும். நான்சாகப்போகிறேன், செத்ததும் ......”

“எங்கே போவாய்? எங்கேபோவாய்?” என்று உபதேசியார் மிகுந்த பாபரப்புடன் கேட்டார்.

“நான் இப்படிச் செய்யவேண்டுமென்றும், நான் தன்னுேடுநித்தியகாலமாக இருக்கவேண்டும்என்றும் ஒருஅலங்காரமாது கூறிச் சென்ரு” என்றுசொன்னுள்.

அப்பெண்ணின் வேண்டுகோளை மறுக்க முடியாதவராய் உபதேசியாரும் அதிகம்சமீபமாயிருந்த குருவானவருக்கு ஒருகடிதம் அனுப்பினூர். அதில்: “உடனேவாருங்கள் ஒருபெண் மரிக்கப்போகிறுள். ஞானஸ்நானம்பெற விரும்புகிறுள்” என்று எழுதியிருந்தது.

குருவானவர் தமது மாட்டுவண்டியைப்பூட்டும்படி உத்தரவிட்டார். ஒரு ஆத்துமத்தை இரட்சிக்கவேண்டுமென்ற தாகத்தோடு குறித்தகிராமத்தைநோக்கித் தாமதமில்லாது புறப்பட்டார். கிட்டத்தட்ட 20மணித்தியாலங்களின்பின் குறித்தஇடத்தையடைந்தார். சாகப்போகும் பெண்ணைப்பற்றி விசாரித்தார். தங்களுக்குத் தெரியாதென ஒவ்வொருவருமே சொல்லிவிட்டார்கள். கடைசியாக ஒருஇளைஞன்ஓடிவந்து காலமைல் தூரத்துக்கப்பால் வேறுசிறுமிகளோடு அவள் விளையாடிக்கொண்டிருக்கிறுளெனத் தெரிவித்தான். குருவானவருக்குக் கோபம்வந்தது நூதனமல்ல, அதனுல் அவர்பயமுறுத்துந்தொனியில் “சர்வேசுரனுடையகாரியங்களில் பரிகாசம்பண்ணுகிறுயா? சாகப்போவதாகக்கூறி, ஞானஸ்நானம்பெற வேண்டுமெனவிரும்பி எனக்கு அறிவித்தல் அனுப்பிவிட்டுத் தோழிகளுடன் கும்மாளம்போட்டு விளையாடிக்கொண்டிருக்கிறுயா? இதுதகுமா? இதுசரியா?” என்று கூறினூர்.

“சுவாமி! தயவுசெய்து என்மேற் கோபங்கொள்ளாதீர்கள். ஒரு அலங்காரமானமாது ஒருகுருவானவரை அழைத்து, என்னை ஞானஸ்நானம் பெறும்படியாகவும், அதன்பின் என்னைத் தன்னுடைய நந்தாவனத்துக்குக் கூட்டிச்செல்வதாகவும்கூறிமறைந்தா” என்று அந்தப்பெண்பிள்ளை கூறியதைக்கேட்ட குருவானவர்:

“என்னமடைத்தனம்! மாதாவாவது, நந்தாவனமாவது ...... இப்படி மதியீனமாகப்பேசினுல் நீ பெருங்கஷ்டத்துக் குள்ளாகநேரிடும்” என்றூர்.

(தொடரும்)

******-*********-******

Bishop's House,
Jaffna. 5-8-57.

According to a new decree of the Sacred Congregation of the Council the fast and abstinence observed up to now on the Vigil of Assumption have been transferred to the Vigil of the Immaculate Conception of Our Lady (Dec. 7th).

As the above decree comes into effect from this year. the Parish Priests confessors and Chaplains are requested to take steps to bring it to the notice of those under their care.

FR. S. EMMANUEL, O.M.I.,
Chancellor.

*   *   *

மேற்றிராசனமாளிகை,
யாழ்ப்பாணம், 5-8-57.

ஆலோசனைச்சபைத் திருச்சங்கத்தின் புதிய ஓர்உத்தரவுப்படி, இதுகாலவரை தேவமாதாவின் மோட்சாரோபணத்திருநாளின் விழிப்புத்தினமாகிய முதல்நாளன்று அனுசரிக்கப்படவேண்டுமெனக் கற்பிக்கப்பட்டிருந்த ஒருசந்தியும், சுத்தபோசனமும் தேவமாதா மாசில்லாமல்உற்பவித்த திருநாளின் விழிப்புத்தினமாகிய முதல்நாளுக்கு (மார்கழி 7) மாற்றப்பட்டிருக்கின்றன.

இந்தஉத்தரவு இவ்வருடத்திலிருந்தே நடைமுறைக்கு வருகின்றமையால் பங்குக்குருமாரும், ஆத்துமகுருக்களும், தாபனங்களின் விசாரணைக்குருமாரும் தங்கள்ஆதீனத்திலுள்ள கிறீஸ்துவர்களுக்கு இதனை அறிவிக்க நடவடிக்கைஎடுக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றூர்கள்.

எஸ். இம்மனுவேல், O.M.I.
கருமாதிகாரி.

******-*********-******

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

ஆவணிமாதம் 9-ந் திகதி, ஐப்பசி மாதம 8-ந்திகதி கார்த்திகை மாதம் 6-ந்திகதி பகிரங்கவிடுதலைநாட்கள்என உள்நாட்டுமந்திரிஅவர்கள் தெரிவித்துள்ளார்கள். அந்தநாட்களில் பாடசாலை நடைபெறக்கூடாதென்று இத்தாற் தெரிவிக்கிறேம்.

PHILIP PONNIAH
Gen. Manager of R. C. Schools
Jaffna, 5-8-57.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண. புறூனே சந்தியாப்பிள்ளை சுவாமியவர்களின் தேவதோத்திர பாடற்பூசை

சென்றவருடம் றோமாபுரியில் குருப்பட்டம்பெற்று, சமீபத்தில் இலங்கை திரும்பிய வண. புறூனே கிங்ஸ்லி சந்தியாப்பிள்ளை சுவாமியவர்கள் சென்ற ஆடி மாதம் 28-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் கொஞ்செஞ்சியாதா ஆசனக்கோவிலுக்கு எழுந்தருளி, அங்கே வண. எம். ஜே. மரியாம்பிள்ளை சுவாமியவர்களும், வண. கிறிஸ்ரி அருள்தாசன் யுவக்கீம்பிள்ளை சுவாமியவர்களும், கட்டளைக்குரவர் வண. ஜோண்மேரிசுவாமியவர்களும் துணைபுரியத் தமது முதற் தேவதோத்திர பாடற்பூசையைப் பெருந்திரளாகக் கூடியிருந்த குரவர்கள், சுற்றத்தவர்கள், ஆசனக்கோவிற் கிறீஸ்துவர்கள் சமுகத்திலே நிறைவேற்றினர். சுவிசேஷத்தின்பின் வண. பி. சூசைப்பிள்ளை சுவாமியவர்கள் செய்த அருமையான பிரசங்கத்திலே, குருவானவர் யார்? அவர்பெற்றுள்ள குருத்துவத்தின் மகிமை எம்மாத்திரம்? அவருக்குள்ள அதிகாரம் யாது? என்பவைகளை வெள்ளிடைமலைபோல் விரித்துக்காட்டி எல்லோரையும் பரவசங்கொள்ள வைத்தார். பூசையின் பின்னர் புதியகுரவர் பரிசுத்தபாப்பரசரின் ஆசீர்வாதத்தை அங்கு சமுகங்கொடுத்த யாவருக்கும் அருளினர், அதன்பின்யாவரும் புதியகுரவரின் அபிஷேகம்பண்ணப்பெற்ற திருக்கரத்தை முத்திசெய்து ஆசிபெற்றனர்.

அன்றுபிற்பகல் 5 மணிக்கு ஆசனக்கோவிலில் புதியகுரவரால் தேவதோத்திரகீதத்துடன் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டது. அதன் பின்னர் சம்பத்திரிசியார்கல்லூரி வீதியிலுள்ள புதியகுரவரது பெற்றோர்களின் இல்லத்தில் பெருந்தொகையாகக் கூடியிருந்த இனசனர், அன்பர்களால் சுவாமியவர்கள் வரவேற்கப்பெற்றார். அவ்வேளை சிற்றுண்டிஉபசாரணை மிகவும்சிறப்பாக நடைபெறலாயிற்று. அன்பர்கள்பலரால் புதியகுரவருக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. ஈற்றில் புதியகுரவர் அங்கு சமுகம்கொடுத்தவர்களுடன் அளவளாவி ஆசியீந்தனர். இப்புதியகுரவர் பல்லாண்டு சுகபலத்துடன் வாழ்ந்து, யாழ்ப்பாணத் திருச்சபையில் மங்காப் புகழுடன் தேவஊழியஞ்செய்துவர எம்பெருமான்திருவருள் பாலிப்பாராக! சுபம்!



## முகமாலை அர்ச். பிலோமினம்மாள் திருநாள்

- ஆவணி 23-ந்திகதி மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரம்.
- ஆவணி 24-ந்திகதி காலை 7 மணிக்கு பாடற்பூசையும் சுற்றுப்பிரகாரமும்.
- 23-ந்திகதி இரவு 12—1 மணி வரை திருமணித்தியாலம் நடைபெறும்.
- 12-ந்திகதி நோவனைகள் ஆரம்பமாகின்றன.
- 22, 23, 24, 25-ந்திகதிகளில் றெயின்வண்டி கோவிலுக்கு முன்பாகத் தரிக்கும்.

B. Soosaipillai,
Nallur, Jaffna.



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பலவருடகாலமாக என்னைவருத்திய வியாதியானது, அர்ச். அந்தோனியாரின் உதவியால் சுகமாயிற்று. அவரின்நாமம் புகழப்படுவதாக.

தா. மேரிசெபஸ்தியானுள்.

* * *

பலவருடகாலமாக எனதுமகளைவருத்திவந்த வியாதி அர்ச். சதாசகாயமாதாவின் உதவியால் சுகமாயிற்று. அவவின்நாமம் புகழப்படுவதாக. இ. ரோசலின்.

* * *

பலவருடகாலமாக என்னைவருத்திவந்த வியாதியானது அர்ச். சதாசகாயமாதாவின்உதவியால் சுகமாயிற்று.

தா. மேரி செபஸ்தியானுள்.

* * *

தேவகிருபையாலும், அண்டிவந்தோர்க்கு அருள்புரியும் ஆரோக்கியநாயகியின் விசேஷவேண்டுதலினாலும், என் மகனை ஆறுவருடகாலமாக உபாதித்த தீராதநோய் குணமாயதைமுன்னிட்டு அடியாள்இதைப் பிரசித்தமாகப் பிரசுரிக்கின்றேன். மரியாயின்நாமம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக.

சில்லாலை B. M. P.

---

புத்தக மதிப்புரை

## என்ன விநோதமானவர்கள்?

ஆக்கியோன் : வண. அருள்சுவாமி,
திருச்சி மேற்றிராசனம்
பிரசுரம் : திண்டுக்கல் நாயகம்பிரஸ்

நூலின் பெயருக்கேற்றாற்போல் நூலிலுள்ள விஷயங்களும் விநோதமாகவேகாணப்படுகின்றன. இந்நூலைப் படித்தால் நூற்றுக்கணக்கான அர்ச்சியசிட்டர்களின் சரித்திரத்தைப் படித்ததற்குச் சமமாகும்.

அர்ச்சியசிட்டர்களின் சுபாவம், புத்திசாதுரியம், அன்பு, சந்தோஷம், சுகம், வேடிக்கை, நட்பு, பூரிப்பு, விளையாட்டு, மௌனம், சுத்தம் என்றின்னோரன்ன தலையங்கங்களின்கீழ் அர்ச்சியசிட்டர்களின்உயரியபண்புகளையும், சுகிர்தநெறிகளையும், அழகியவிருதுவாக்கியங்களையும், மணிமொழிகளையும் அடக்கியுள்ளது இந்நூல்.

சுவைபயக்கும் அழகானநிகழ்ச்சிகளை உதாரணமாகக்கொண்டு இந்நூல் யாக்கப்பட்டிருப்பதால் பன்முறை படித்தாலும் இதன்பொருளழகுகுறைபடாதிருத்தலே இந்நூலின் தனிப்பெருஞ்சிறப்புக்குத் தக்கசான்று பகருவதாகும். அத்தோடு சாதாரண மக்களும் படித்தறியக்கூடியவிதமாக எளிய இனியதமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூலை இளஞ்சிறார்கள் படிப்பதால் அவர்கள் அறிவில் வளம்பெறுவது மாத்திரமன்றி, நல்லொழுக்கத்திலும், தேவபக்தியிலும் வளர்ச்சியுறுவார்கள் என்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை. எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

## நாடுசங்கதிகள்

● ஐரோப்பாவிலே செக்கோசிலவாகியாவில்தான் சிகறெற் புகைப்பவர்களின்தொகை அதிகமாம். அந்நாட்டினருள் ஒவ்வொருவரும் வருடமொன்றுக்குச் சராசரிவீதமாக 4,132 சிகறெற்றுகள் புகைப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. வருடம் ஒன்றுக்குச் சராசரிவீதமாக அமெரிக்கர் ஒவ்வொருவரும் 2,389 சிகறெற்றுகளும், கனடாவில் ஒவ்வொருவரும் 1,203 சிகறெற்றுகளும் புகைப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

● டொனல்ட் கிறிஸ்ப்என்ற அமெரிக்க சினிமாநடிகர் "சாடல் கிவிண்ட்" எனும் புதியபடம்ஒன்றில் தற்போது நடித்துவருகின்றார். இது அவர்நடிக்கும் ஐநூறாவது படமாகும். பேசாத ஊமைப்படங்களின் ஆரம்ப காலத்திலிருந்தே இவர் நடித்துவருகின்றார். அப்போது வாரம்ஒன்றுக்கு இருபடங்கள்வீதம் எடுக்கப்படுமாம். தற்போது இவர் வருடம்ஒன்றுக்கு இருபடங்கள் வீதமே நடித்துவருகின்றார்.

● இந்தியாவின் மிகப்பெரிய செல்வந்தர்களாயுள்ள மகாராஜாக்களில்ஒருவரான பரோடாமகாராஜா இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்புமந்திரி திரு. கிருஷ்ணமேனனின் பாராளுமன்றக் காரியதரிசியாகச் சென்ற 1-ந் திகதியன்று விசுவாசப் பிரமாணஞ்செய்து பதவியேற்றிருக்கின்றார். முன்னாள் மகாராஜாக்களிலே அரசாங்க பதவி ஒன்றுக்கு முதன்முதலாகத் தெரிவு செய்யப்பெற்றிருப்பவர் இவரே.

● அமெரிக்க செனற்றர்களில் ஒருவரான திரு. வலஸ்பென்னற் என்பவர் கொண்டுவந்துள்ள ஓர்சட்டப்படி, சிகறெற் பெட்டிகளின்மேல் — "எச்சரிக்கை! இந்தப்பொருளை நீண்டகாலம் உபயோகித்தால் புற்றுநோயோ, சுவாசப்பையில் அல்லது இருதயத்தில் அல்லது இரத்த ஓட்டத்தில் கோளாறுகளோ ஏற்படக்கூடும்" — என்ற வார்த்தைகளைக் கொண்ட ஓர் முத்திரைச்சீட்டு ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.

● பிரபல அமெரிக்க ஹாஸ்யநடிகரான திரு. றெட் ஸ்கெல்ரன் என்பவரின் ஒன்பதுவயதுள்ள மகனை றிச்சாட்எனும் பாலியன் இரத்தபுற்றுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றான். அவன் நீண்டநாள் சீவித்திருக்கமாட்டானுகையால் அவன் மரணமடையுமுன் உலகிலுள்ள பிரசித்திபெற்ற இடங்களைப் பார்த்துமகிழும்பொருட்டு அவனுடைய தகப்பனர் தமது குடும்பத்தினருடன் உலகத்தைச் சுற்றிவருகின்றார்.

● சீனக்குருமாரும், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரும், குருமடத்து மாணவர்களுமாக ஆயிரம்பேருக்கு மேற்பட்டவர்கள் சீனதேசத்துக்கு வெளியே தங்கள் அப்போஸ்தலிக்க தொண்டுகளைத் தொடர்ந்து நடத்திக்கொண்டும், தங்கள்படிப்பைத் தொடர்ந்து படித்துக்கொண்டும் வருவதாகத் தென்கிழக்கு ஆசியாவிலுள்ள சீனர்களின் அப்போஸ்தலிக்க தரிசகரான சாள்ஸ் வான் மெல்கிபெக் மேற்றிராணியார் தெரிவித்திருக்கின்றார்.

● மகாத்மாகாந்தியின் இளைய புதல்வரும், திரு. சி. இராஜகோபாலாச்சாரியாரின் மருகரும், டில்லி "ஹிந்துஸ்தான் ரைம்ஸ்" பத்திரிகையின் நிர்வாகஆசிரியருமான திரு. தேவதாஸ்காந்தி சென்ற 3-ந் திகதி காலை பம்பாய்நகரிலே மாரடைப்பினுல் காலமானர். இறக்கும்போது இவருக்கு வயது 56. இவர்மனைவி ராஜாஜியின் புதல்வியாவர். இவருக்கு மூன்று புதல்வரும், ஓர்புதல்வியும் இருக்கின்றார்கள்.

## குருப்பட்டாபிஷேகம்

கண்டியிலே அம்பிற்றியாவிலுள்ள இலங்கைத் தேசியகுருமடத்துச் சிற்றாலயத்திலே சென்ற 6-ந்திகதி செவ்வாய்க்கிழமைகாலை திறுேவாஸ்நகரின் கௌரவமாத்திரையான மேற்றிராணியாரான மகாவந். ஆர்மண்ட் கிளாபோ ஆண்டவரால் அமலோற்பவமரியநாயகி குருபரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த வண. லூய்ஜி ஹெற்றியாராய்ச்சி, வண. ஹில்லறியன் வேதநாயகம், வண. விக்றர் குரூஸ், வண. லோறெண்ஸ் சேவியர், வண. சலமன் பெர்னுண்டோ எனும் பிறதர்மார்ஐவரும், ஆசீர்வாதப்பர் சபையைச்சேர்ந்த பிறதர்மார்மூவரும் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றார்கள். அத்தருணம் குருமடத்தின் பேராசிரியர்களான குரவர்களும், குருத்துவமாணவர்களும், புதியகுரவர்களின் பெற்றார், சுற்றத்தவர், அன்பர்களும் பெருந்திரளாகச் சமுகமளித்திருந்து, பின்னர் புதியகுரவர்களின் அபிஷேகஞ்செய்யப்பெற்ற புனிதகரங்களைமுத்தமிட்டு ஆசிபெற்றுக்கொண்டார்கள்.

## அங்கும் இங்கும்

### சட்டரீதியான வழியாது?

"சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமெனக்கோரும் சிங்களவர்களுக்குப் பிரச்சினைகளைத்தீர்க்கச் சட்டரீதியான வழி பொதுத்தேர்தல்வேண்டுமெனக் கோருவதன்றிச் சத்தியாக்கிரகம்அல்லவென்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன்; தமிழரசுகட்சியோடு ஏற்பட்டிருக்கும் உடன்பாட்டிற்குச் சிங்கள மக்களுள் பெரும்பாலார் விரோதமானவர்கள் அல்லவென்று நாம்நம்புகிறேன்.

திரு. டபிள்யு. தஹநாயகா,
கல்விமந்திரி.

### தமிழ்மக்களின் உரிமைகள்

"மொழிப்பிரச்சினையிலே தமிழரசுக்கட்சியுடன் பிரதமர்செய்துகொண்ட சமரசஉடன்படிக்கையிலே மக்கள் அதிருப்திகொண்டால் நான் எனதுமந்திரிபதவியை மட்டுமல்ல, எனது எம். பி. பதவியையும் இராசினாமாச் செய்யத் தயாராயிருக்கிறேன். சிங்கள மக்களுடன் நூற்றாண்டுகளாக ஒன்றாகவாழ்ந்துவரும் தமிழ்மக்களின் உரிமைகளை அவர்களுக்கு மறுக்கவேண்டுமென்று சரிவரச்சிந்திக்கும் எந்தமனிதனும் சொல்லமாட்டான். சமரசஉடன்படிக்கையின் மூலம் சிங்களமக்களுக்கோ, அல்லது அவர்களின் மொழிக்கோ சிறிதளவுதானும் பிரதமர் தீங்கிழைக்கவில்லை."

திரு. டி. பி. இலங்கரத்ன,
தொழில்—சமூகசேவாமந்திரி

### ஒரேயடியாகப் பெறமுடியாது

"தமிழரசுக்கட்சிக்கும், பிரதமருக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை இந்தமன்றம் மிகவுங்கவனமாகப் பரிசீலனைசெய்தது. அடுத்துவரும் முயற்சிக்கு இது ஒருமுதற்படியாக அமைந்துள்ளதுஎன்பதை இம்மன்றம் உறுதிப்படுத்துவதுடன் திரு செல்வநாயகம்அவர்களும், பிரதமரும் இதனை உருவாக்குவதில் காட்டிய இராசதந்திரத்தையும், துரிதத்தையும் பாராட்டுகிறது. ஒரேயடியாக எதனையும் பெறமுடியாது. கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்க, சாதனைகள் பகுதிபகுதியாக நிறைவேற்றப்படுமென்று சரித்திரம்போதித்துள்ளது. இப்போது தமிழரசுக்கட்சி பெற்றுள்ளபகுதி ஒருபெரும் பகுதியாகும். மக்கள் பூரணசமஅந்தஸ்துப் பெறும்வரை தமதுகிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்தவேண்டும்."

கதிரைவேற்பிள்ளைகலாமன்றம்,
புலோலி, பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாபெரும் சம்பவத்தின் நூற்றாண்டு

**தேவமாதா லூர்து நகரையடுத்த மசபியேல்கெபியில் பெர்னதேத்அம்மாளுக்குக் காட்சிகொடுத்து "நாமே அமலோற்பவம்" என்று திருவாய்மலர்ந்த நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நமது பரிசுத்தத்தந்தை 12-ம் பத்திநாதபாப்பரசர் சென்றஆடிமாதம் 2-ந்திகதியன்று பிரான்ஸ்தேச மேற்றிராணிமாருக்கு ஓர்நிருபம்விடுத்துள்ளார். அந்த நிருபத்தின் சாரம் வருமாறு:**




BERNADETTE'S VISION

'கிறீஸ்துவநாடு' எதுவும் மரியாயின்நாடாகவு மிருக்கும்; கிறீஸ்துவின் இரத்தத்தால் மீட்டுஇரட்சிக்கப்பட்டமக்களுள் மரியம்மாளைத் தனது தாயாகவும், பாதுகாவலாகவும் தெரிந்துகொள்வதில் மகிழ்ச்சியடையாத சனத்தைக் காணமுடியாது. இவ்வுண்மை பிரான்ஸ்தேச சரித்திரத்தை வாசிக்கையில் மிகத்தெளிவாக விளங்குகிறது. அத்தேசம் கிறீஸ்துவேதத்தைக் கைப்பற்றிய வன்றே தேவமாதாபக்தியையும் கைக்கொண்டது. அங்குள்ள மரியன்னையின் திருசேத்திரங்கள் பெருமைவாய்ந்தனவும், இன்றைக்கும் ஏராளமான திருயாத்திரிகர்களை ஈர்ந்துகொள்வனவுமாய் விளங்கிவருகின்றன. மிகப் பழமைவாய்ந்த மரியன்னையின் திருசேத்திரங்களுள் ஒன்றாகிய ஷார்த்ர்திருப்பதிக்கு இன்றைக்கும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் திருயாத்திரைசெய்வதைப் பார்க்கலாம். அந்நாட்டில் வெவ்வேறு சிறப்புப்பெயர்களுடன் மரியன்னைக்குத்தோத்திரமாக எழுப்பப்பெற்றுள்ள சிறியனவும், பெரியனவுமான கோயில்களுக்குக் கணக்கில்லை.

இந்த ஆலயங்களில் தொன்றுதொட்டே பிரான்சியமக்கள் மரியன்னையைப் புகழ்ந்தேற்றி வந்துள்ளபோதிலும் பத்தொன்பதாம்நூற்றாண்டை மரியன்னை விசேஷவிதமாக மகிமைப்படுத்தச் சித்தங்கொண்டாள். ஒருசில நிகழ்ச்சிகளை மட்டும் குறிக்குமிடத்து, புதுமையுள்ளபொட்டுச்சுரூபத்தை (Miraculous Medal) எடுத்துக்கொள்வோம். நாட்டின் தலைநகரில் வின்சென்ற் டி போல்சபைக் கன்னியர்களுள் ஒருவருக்குக் காட்சிதந்து மரியன்னை தெரிவித்த திட்டத்தின்படி உருவாக்கப்பெற்ற பொட்டுச்சுரூபங்கள்மூலம் இன்று உலகெங்கும் கணக்கற்றமக்கள் ஆத்துமசரீர நன்மைகளை அடைந்துவருகின்றனர். சிலவருடங்களுக்குப்பிறகு 1858-ம் ஆண்டு மாசிமாதம் 11-ந்திகதியன்று நாட்டின் வேறொருபகுதியாகிய பிறனீஸ்மலைப்பிரதேசத்தில் ஓர் பக்தியுள்ளசிறுமிக்கு மரியன்னை காட்சியளிக்கிறாள். காட்சிகள்சம்பந்தமான சகலவிபரங்களையும் தீர்க்கஆராய்ந்து திருச்சபை 1862-ம்ஆண்டு அவற்றை ஏற்றுக்கொள்ளுகிறது. உலகின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் மரியன்னை காட்சிதந்த இடத்துக்கு உவந்து சென்று கணக்கற்ற ஆத்துமசரீரநன்மைகளைப் பெற்றுவருகின்றனர். திருயாத்திரைகள் எத்தனை! என்னென்ன விதமான திருயாத்திரைகள்! ஒரு மேற்றிராசனத்தின் திருயாத்திரை, ஒருநாட்டின் திருயாத்திரை, வெவ்வேறு நோக்கங்களைக்கொண்ட கோஷ்டியினரின் திருயாத்திரை, சர்வதேசமக்களின் திருயாத்திரை. உலகில் துன்பப்படுவோரின் கூட்டங்களை இங்குபோன்றுவேறெந்த விடத்திலும் இவ்வளவு அபரிமிதமாகக் காணமுடியாது. இவ்வளவு மனவமைதியையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும் மக்கள் கண்டடையும் ஸ்தலமும் உலகில் வேறெங்கும் காணமுடியாது.

கடந்த நூறுஆண்டுகள் லூர்து திருசேத்திரத்தை இராயப்பரின் ஆசனத்துடன் மிகநெருக்கமாகப் பிணைத்துள்ளன. இவ்வாறு பிணைத்தவள் தேவதாய்தான் அல்லவா? கன்னிமரியம்மாள் சென்மபாவக் கறையின்றியே உற்பவித்தாளென்று திருச்சபைத்தலைவர் கூறியதை அத்திருஅன்னை நேரில் காட்சிதந்து உறுதிப்படுத்துகின்றாள். எனவே, பாப்புமார் அந்தத் திருசேத்திரத்தின்மீது விசேஷ பற்றுக் கொண்டிருப்பது இயற்கையே. அங்கு நிறுவப்பெற்ற தேவமாதாவின் திருச்சுரூபத்திற்கு முடிசூட்ட ஒன்பதாம்பத்திநாத பாப்பானவர் தமதுபிரதிநிதியை அனுப்பி வைக்கிறார்.

1892-ம்ஆண்டு பதின்மூன்றாம்சிங்கராயபாப்பானவர் அமலோற்பவமாதா காட்சியளித்ததிருநாளுக்கென அன்றையபூசையில் சொல்லுவதற்கேற்ற விசேஷசெபங்களை இயற்றித்தந்தார். இது ஆரம்பத்தில் பிரான்ஸ்தேசத்தில்மட்டுமே வழங்கிவந்தது. பத்தாம்பத்திநாதபாப்பானவர் அப்பூசையைத் திருச்சபைமுழுமைக்கும் உரியதாக்கினார். வத்திக்கான்தோட்டத்தில் எழுப்பப்பெற்றுள்ள லூர்து கெபியைச் சிங்கராயபாப்பானவரே தமதுகரங்களால் மந்திரித்தார்.



BERNADETTE AT THE AGE OF 14.

தேவமாதா சென்மபாவதோஷமின்றி உற்பவித்தாள்என்பது விசுவாசசத்தியமாகப் பிரகடனம்பண்ணப்பட்ட ஐம்பதாம் ஆண்டு விழாவின்போது அர்ச். பத்தாம்பத்திநாதர் விடுத்தநிருபத்திலே அந்தப்பிரகடனத்துக்கும், லூர்துநகரகாட்சிக்குமுள்ள தொடர்பை எடுத்துக்காட்டி, அங்கு அவ்வன்னையின் மன்றாட்டால் நடைபெறும் புதுமைகளைக் குறிப்பிட்டார். லூர்துநகரைத் தார்புநகருடன் இணைத்து, மேற்றிராசனநகர் என்ற பதவிக்குஉயர்த்தினார். பெர்னதேத்அம்மாளுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அளிப்பதற்குவேண்டிய ஆயத்தமுயற்சிகளைத் தொடக்கி வைத்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக லூர்து திருசேத்திரத்திற்கும், திவ்வியசற்பிரசாத ஆண்டவருக்குமுள்ள அந்நியோன்னிய பந்தனத்தைச் 'சற்பிரசாதத்தின் பாப்பானவர்' என்று சிறப்புப்பெயர்பெற்றவராகிய அர்ச். பத்தாம்பத்திநாதர் மிகவுருக்கமாகஎடுத்துக்காட்டியுள்ளார். மரியன்னை தம்மைநாடிவருபவர்களைத் தமதுதிருமகனிடம் ஈர்த்துச்செல்லுகிறாள் என்றும், மரியன்னையின் திருசேத்திரமாகவும், அதேசமயத்தில் திவ்விய சற்பிரசாதஆண்டவரின் மகிமை விளங்கும் தலமாகவுமுள்ள லூர்துபதி உலகிலுள்ள வேறெந்தச்சேத்திரத்தையும்விட அதிகமகிமையுள்ளதாக விளங்குகிறதுஎன்றும் அர்ச். பத்தாம்பத்திநாதர் கூறியுள்ளார்.

ஏற்கெனவே பல்வேறுசலுகைகள் அளிக்கப்பெற்றிருந்த இத்திருசேத்திரத்திற்குப்பதினொராம்ஆசீர்வாதப்பர் மேற்கொண்டு பலபலன்களை அளித்தார். இதன்றித் தார்பு-லூர்து மேற்றிராணியாருக்கு லூர்துதிருசேத்திரத்திலேயே அதிமேற்றிராணிமார்கட்குமட்டும் உரித்தான பதவிச்சின்னமாகிய 'பல்லியும்' அளிக்கச்செய்தார்.

பதினொராம்பத்திநாதர் தேவமாதாவைக்காணப் பாக்கியம்பெற்ற பெர்னதேத்அம்மாளுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அளிக்கிறார். அக்கன்னிகையின்திருவுடல் சேமிக்கப்பெற்றிருக்கும் நெவேர்நகரானது தேவமாதாவின் பக்தர்களுக்கு மற்றொரு சேத்திரமாகியுள்ளது. இரட்சணியத்தின் பத்தொன்பதாவது நூற்றாண்டு யூபிலியின் இறுதித்திருச்சடங்குகள் லூர்துதிருசேத்திரத்திலேயே நடைபெறுகின்றன.

நமக்குமுன்னிருந்த பாப்புமார் இவ்வளவும்செய்திருக்க நாம்வாளாவிருப்பது தகுமா? நாம்ஒருநிருபம் (Fulgens Corona) விடுத்து மரியன்னையை மகிமைப்படுத்தினோம். அமலோற்பவம் விசுவாசசத்தியமாகப் பிரகடனம் பண்ணப்பட்ட நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டத்தின் இறுதித்திருச்சடங்குகள் லூர்துபதியிலே நடைபெறவும் திட்டம்செய்தோம்.

இன்றைக்கும் நாம் காவ்நதிக்கரையிலுள்ள அந்தச்சிந்தைக்கினிய சேத்திரத்தின்பால் எமதுகண்களைத் திருப்புகிறோம். கடந்தநூறுவருடங்களிலே அவ்விடத்தில் தேவமாதாவின் மன்றாட்டால் அவள்திருமகன் பலஆத்துமங்களுக்கும், சரீரங்களுக்கும் அவ்வளவுநன்மைகள் புரிந்துவந்தாரெனில் இந்தநூற்றாண்டுவிழாவின்போது மரியன்னை நமக்குஇன்னுமதிகமாகச் சலுகைகள் பெற்றுத்தருவாள்என்றுநாம் உறுதியாக நம்பியிருக்கிறோம். அதே சமயத்தில் தமதுகாட்சிகளால் அவள் படிப்பித்த மகத்தானகாரியங்களை நாம்மனதிலிருத்தவேண்டுமென்றும், அவள் தெளிவாகக்காட்டியவழியை நாம் பின்பற்றவேண்டுமென்றும் அவள் விரும்புகிறாள்என்பதையும் மறத்தலாகாது.

(தொடரும்)

# கோவில்கட்டிய ஐஸ்வரியவான்

முன்னோர்காலத்தில் ஓர்ஐஸ்வரியவான் தேவனின் அதிமிகதோத்திரத்துக்காகப் பெரியதோர்கோவிலைக்கட்டியெழுப்ப விரும்பினான். அதற்கு வேண்டிய செலவெல்லாம் தான்ஒருவனே பொறுக்க வேண்டுமென்றும், பிறத்தியாரின்உதவி பெற்றுக்கொள்வதில்லையென்றும், இவ்விதமாய் அது முழுவதும் தனதுசொந்தக்காணிக்கையாகவே இருக்கவேண்டுமென்றும் ஆசித்து வேலையை ஆரம்பித்தான். ஓர் தேவாலயம் கட்டப்போவதாகக் கேள்விப்பட்ட ஒரு ஏழைப்பெண் தான் கைபாடுபட்டுச் சமபாதித்ததில் காலும் அரைக்காலுமாகப் மிச்சம்பிடித்து ஒருசொற்பதொகை சேர்த்து ஐஸ்வரியவானிடம் கொண்டுபோய், "ஐயா, இதையும் கோவில்கட்டடத்திற்குச் சொற்பஉதவியாக ஏற்றுக் கொள்ளும்"மென்று சொல்லிக்கொடுத்தாள்.

அதற்குஅவன், "அம்மா, உன்காசை நீயே கொண்டுபோ; கோவில்கட்டுவதற்கு வேண்டியதையெல்லாம் நான் ஒருவனே பார்த்துக்கொள்வேன்; பிறத்தி உதவிவேண்டாம்"என்று சொல்லிவிட்டான். தன்சொற்பஉதவியை இவ்விதம்வேண்டாமென்று நிராகரித்துத் தள்ளிவிட்டதைக்கண்ட அந்த மனுஷி மனங்குன்றிச்சலித்துத் தன் ஏழைக் குடிசைக்குத் திரும்பினாள். என்றாலும் அவள்மனங் கேட்கவில்லை. தன் நல்லமனதைக் காண்பிக்கத் திருப்பணிவேலைக்காகத் தானும்ஏதாவது சொற்பகாரியஞ்செய்தாலல்லோ தனது மனதுக்குத் திருப்தியாகும்; அதற்கு என்னசெய்யலாமென்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

அப்படியிருக்கையில் மலைமேல்கட்டுகிற அந்தக்கோவிலுக்குக் கல்லேற்றிக் கொண்டுபோகிற குதிரைவண்டிகள் எப்போதும் அந்தமனுஷியுடைய குடிசையின்பக்கமாகவே போவதும், அந்த இடத்தில்வந்தவுடன் குதிரைகள்சற்று நேரம்நின்று களைப்பாறிப் போவதும் வழக்கம். அப்பொழுது அந்தமனுஷிதானும் கோவில்வேலைக்காக ஏதோ சொற்பஉதவி செய்ததாக இருக்கட்டுமென்று தனக்கு வேறுஎவ்வளவு வேலையிருந்தாலும், அந்தக்குதிரைகளுக்கு ஒருபிடிபுல் கொண்டுவந்து போடத்தவறமாட்டாள். அவைகளும் களைப்பாறிப் பாரவண்டியை இழுத்துக் கொண்டுபோகும்.

கடைசியாய்க் கோவில்கட்டி முடிந்தது. ஐஸ்வரியவான் தேவதோத்திரத்துக்காகத் தன்னாலேயே அதுகட்டப்பட்டதென்று எல்லோரும்அறியும்படியாக ஒருகல்லில்எழுதித் தன்பெயரையும் பெரியஎழுத்தில் பதிப்பித்து முன் மண்டபத்தில் வைக்கக் கட்டளையிட்டான். மறுநாட்காலை அவன் அந்தக் கல்லைப்பார்க்கும்படி சென்றவிடத்தில் அவன்பெயர் எடுபட்டிருந்தது. ஒரு பெயரையும் காணோம். இதென்னமாயமோவென்று அவன் ஆச்சரியப்பட்டு வேலைகாரரைஅழைத்துத் திரும்பவும் தன் பெயரைக் கல்லில்பதிப்பிக்கச் சொன்னான். அவர்களும் அப்படியே செய்தார்கள். மூன்றாம்நாள் ஐஸ்வரியவான் திரும்பவும் கல்லைப்பார்க்கச் சென்றான். அப்பொழுதும் அவன் பேரைக் காணோம். மறுபடியும் அவன்பெயர் கலலில்கொத்தப்பட்டது.

அடுத்தநாள் வந்தபோது அவனுடைய பெயருக்குப்பதிலாக அந்தஏழை மனுஷியுடையபெயர் அதிலிருந்தது. அதைக்கண்டவுடனே அவனுக்குக் கோபாத்திரம்பொங்க, சுவாமியாரிடம் முறையிட்டு, அவர்மூலமாய் விசாரிக்கும்படி அவளைத்தருவித்தான். அவள் வந்ததும், "உனக்கு இந்தஆணவம் என்ன? என்பெயரைஎடுத்துப்போட்டு உன்பெயரைப் போட்டுக்கொள்ள அவ்வளவுதுணிவுஉனக்குவந்துவிட்டதா?" என்று அதட்டிக்கேட்டான். அவளோ "அதைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது"என்று பரமார்த்தமாய்ப் பதில்சொன்னாள்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



### அருமைச் சகோதரங்களே!

வேதபோதக நாடுகள் எனும்போது எம்முடைய தேசத்தையும், சீனு, யப்பான், ஆபிரிக்கா தேசங்களையும்தான் எண்ணுகிறோம். ஆனால், வடகடலுக்குமேலே வேதம் பரம்பவேண்டிய நாடு ஒன்று உண்டு. அதுதான் சுவீடன்.

அங்கு ஒளிந்து மறைவிலே பூசைகாணவேண்டும். இங்கிலாந்திலே எட்டாம் என்றிஅரசன் கத்தோலிக்க குருமாரை வேட்டையாடித் திரிந்தான். அதினிமித்தம் குருமார் தலைமறைவாகச் சீவிக்க வேண்டி இருந்தது. அதுபோலச் சுவீடன்தேசத்திலும் உண்டு.

சுவீடன்தேசம் கிறீஸ்துவசமயத்தைப் பின்பற்றினாலும் கிறீஸ்துவ சீவியத்துக்கு அவசியமானசூழல் அங்குஇல்லை. சுவீடன்தேசம் மிகவும் துப்புரவும், செல்வமும் நிறைந்த நாடு. பிரான்சு, ஸ்பெயின், இத்தாலிஆதியாம் நாடுகளிலுள்ள வறுமை அங்குஇல்லையாயினும், அந்நாடுகளிலுள்ள வனப்பும், ஆனந்தமும் அங்குகாணுதல் அரிது.

அண்மையில் கத்தோலிக்க மேற்றிராசனம் ஒன்றுதாபித்து, மேற்றிராணியாரும் நியமிக்கப்பெற்றிருக்கிறார். சுவீடன்தேசத்தில் கத்தோலிக்கசபை வளர்ந்து, கத்தோலிக்க ஒழுக்கமும், பண்பாடும் மக்களிடையே செறிந்து அதன் பழையபெருமையை அடைய நீங்கள் செபத்தினால் உதவலாம்.

உங்கள் அன்புள்ள,
அண்ணா.

---

## நியாயமான தண்டனை

பிரான்சுப்புரட்சியில் காயமடைந்தவர்களும், உயிர் விட்டவர்களும் அநேகர். ஆஸ்பத்திரியிலிருந்த வாலிபனொருவன் கடுங்காயமுற்றிருப்பதாக ஆஸ்பத்திரி விசாரணைக் குருவானவருக்கு அறிவிக்கப்பட்டது. அவன் இன்னும் உயிரோடிருந்ததே பலருக்கு ஆச்சரியமாயிருந்தது. குருவானவர் அவனிடம் சென்றார். "தம்பி! நீ கடுங்காயமுற்றிருப்பதாக நான் கேள்வியுற்றேன்" என்றார்.

"சுவாமி! என் மார்பின் மீது போர்த்திருக்கும் துணியைக் கொஞ்சம் தூக்குங்கள்" என்று வாலிபன் கூறினான். குருவானவர் அப்படியே செய்தார். அவர் கண்டது அவரைத் திடுக்கிடச் செய்தது. வாலிபனது இருகரங்களையும் காணோம்.

"சுவாமி! என் காற்பக்கம் இருக்கும் போர்வையையும் எடுத்து அகற்றுங்கள்" என்றான். குருவானவர் அகற்றினார். அவனது கால்கள் அறவே வெட்டப்பட்டிருந்தன. குருவானவர் சிலையாய் நின்றுவிட்டார்.

"மகனே! உன்நிலையைப் பார்த்து நான் மிகவும் அநுதாபப்படுகிறேன்" என அவர் மொழிந்தார்.

"சுவாமி! தங்களது அநுதாபத்துக்கு நான் சிறிதும் பாத்திரமானவனல்லன்; எனது வேதனை முற்றிலும் நியாயமானது; ஒருநாள் நான் என் தோழர்களுடன் செல்லும்போது பாடுபட்ட பெரிய சுரூபம் ஒன்றைப் பார்த்தோம்; அதை நாசமாக்க நாங்கள் தீர்மானித்தோம்; நான்தான் மும்முரமாக வேலைசெய்தேன்; சிலுவையின் மீதேறிக் கிறீஸ்துநாதரின் கைகளையும், கால்களையும் என் வாளால் துண்டித்தேன்; அவரது உடல் கீழே தூசியில் விழுந்தது; பின்னர் நாங்கள் கூடாரத்திற்குத் திரும்பினோம்; சற்று நேரத்தால் யுத்தம் ஆரம்பித்துவிட்டதற் கறிகுறியாகச் சங்கு ஊதினார்கள்; எதிரிகள் கையில் முதன்முதல் அகப்பட்டவர்களில் நானும் ஒருவன்; கிறீஸ்துநாதரின் கைகளையும், கால்களையும் எங்கு நான் துண்டித்தேனோ, அதே இடத்தில் என்கைகளும், கால்களும் துண்டிக்கப்பட்டன; ஆனால், நான் விசனப்படவில்லை; கடவுள் என் கண்களைத் திறந்ததற்காக நான் அவருக்கு நன்றிசொல்லுகிறேன்; நான் செய்த அக்கிரமத்தின் கனுகனத்தை இப்போது உணர்கிறேன்; இப்போதே கடவுள் என்னைத் தண்டித்துவிட்டார்; மறுஉலகில் அவர் என்மீது இரக்கமாய் இருப்பார் என்று நம்புகிறேன்" என்றான்.

இவ் வாலிபனைப்போல் நம்மில் அநேகர் எங்கள் ஆத்துமங்களில் இருக்கும் கிறீஸ்துநாதரின் உருவத்தைச் சாவானபாவத்தால் நாசமாக்கி வருகின்றோம். காயப்பட்ட வீரனுடைய கண்களைத் திறந்தது போல, தேவன் எங்கள் கண்களும் திறந்து அக்கிரமதோஷங்களை அறியக் கிருபைசெய்தருள்வாராக!

— ஜே. எம். என்.

---

## என் குழந்தாய்!

தே. ப. பெ.

பூவின் வடிவமாய்ப்
பொலிகின்ற என் குழந்தாய்!
பாவின் சுவையான
பைங்கிளியே என் குழந்தாய்!

வீட்டை ஒளியாக்கும்
விண்மணியே என் குழந்தாய்!
வாட்டும் துயர்போக்க
வழிகாட்டும் என்குழந்தாய்!

செவிகளில் தேன்மழலை
சிந்துகின்ற என்குழந்தாய்!
புவியினில் அமுதமழை
பொழியவைக்கும் என் குழந் [தாய்!

உள்ளம் களிபொங்க
ஓடிவரும் என்குழந்தாய்!
தெள்ளு தமிழிசையைத்
தெரிவிக்கும் என் குழந்தாய்!

வாழ்வின் நிதியான
வான்மழையே என் குழந்தாய்!
தாழ்வு மனமகற்றும்
சாரதியே என் குழந்தாய்!

கோலஎழில் மோகனமே!
கோமளமே! என் குழந்தாய்!
காலமெல்லாம் நீ வாழ்க!
கண்மணியே! என் குழந்தாய்!

---

## குச்சிப்பெட்டிப் பரிசோதனை

ஒருநாள் எசமான் தனது வேலைக்காரனைப்பார்த்து: "நீ நேற்றுவாங்கிக்கொண்டுவந்த நெருப்புப்பெட்டி நன்றாய்ப் நெருப்புப்பற்றவில்லை; நீ போய்இன்றுநல்ல நெருப்புப்பெட்டி வாங்கிவா?" என்றான். வேலைக்காரன் எசமான் சொற்படியே கடைக்குப் போய் வெகுசீக்கிரம் திரும்பிவந்து: "ஐயா! இந்த நெருப்புக்குச்சிகள் எல்லாம் நன்றாய் எரியும். ஏனென்றால், இவைகள் ஒவ்வொன்றையும் கடையில்வைத்தே பரீட்சித்துப் பார்த்தேன்!" என்றான். எசமான் அந்த நெருப்புப்பெட்டிகளைத் திறந்து பார்த்து: "அடா மூடா! இந்த நெருப்புக்குச்சிகள் எல்லாம் எரிந்து போயிருக்கிறதே; நீ அவைகளை என்னசெய்தாய்?" என்றான். அதற்கு வேலைக்காரன்: "ஐயா! அவைகள் ஒவ்வொன்றையும் கடையில் வைத்தே நல்லகுச்சிகள்தானாஎன்று பரீட்சிக்கும்படியாய்த் தட்டிக்கொளுத்திப் பார்த்தேன்; அந்தப்பெட்டியிலுள்ள எல்லாக்குச்சிகளும் ஒன்றுபோல் மிகநன்றாய்ப் பற்றிஎரிந்தன. அதனால் அவைகளைக்கொண்டு வந்தேன்!" என்றான்.

---

## கண்டு பிடியுங்கள்

பின்வரும் சதுரங்களில் காணப்படும் பதினாறு எழுத்துக்களைக் கொண்டு ஐந்து பெரிய அர்ச்சியசிட்டர்களின் நாமங்களைக் கண்டறியலாம். இவ் ஐவரில் ஒருவர் அப்போஸ்தலர். இருவர் வேதபாரகர்கள். ஒருவர் வேதசாட்சி. ஒருவர் ஸ்துதியர். இவர்கள் யார்?

| | | | |
|---|---|---|---|
| அ | த் | தோ | த |
| ஞா | கு | ர் | சி |
| ந் | தி | செ | னி |
| ஸ் | ம | யா | ப |

விடைகள் மறுபக்கம் பார்க்க.

எ. கிறிஸ்பின் விக்றர் பெர்னாந்து,
ஏத்துக்கால்

---

நகைச் சுவை

## அறப்படித்துக் கூழ்ப்பானையில் வீழ்ந்த நால்வர்

[பழைய கதைஒன்றிற்குப் புதுமெருகிட்டுத் தந்திருக்கிறார் "தேவன்பிட்டி ராஜ்."]

ஓர் ஊரில் நண்பர்களாக நால்வர் வாழ்ந்துவந்தனர். இவர்கள் முறையே ஒருவர் சங்கீத ஆசிரியனாகவும், மற்றவர் வைத்தியராகவும், மற்றவர் ஆராய்ச்சி நிபுணராகவும், மற்றவர் சாஸ்திரியாராகவும் தொழில்புரிந்து வந்தனர். இவர்களது ஒற்றுமை அவரரின்தொழில் முன்னேற்றத்துக்குப் பெரிதும் உதவிபுரிந்தது.

ஓர்முறை இவர்கள் ஓர் உல்லாசப் பிரயாணம் செய்யப்புறப்பட்டார்கள். சிலகிராமங்கள் பல பட்டினங்கள்கடந்து ஓர்கிராமத்தை அடைந்தார்கள். அக்கிராமத்தில் தாமே தமது உணவைத் தாயாரிக்க எண்ணினார்கள். சமையல்பாத்திரங்களை இரவலாகஎடுத்துச் சங்கீத ஆசிரியனைச் சமையல்செய்யும்படி சொல்லிவிட்டு, ஆராய்ச்சிநிபுணர் சாப்பாட்டுக்குத் தயிர்எடுப்பதற்கும், வைத்தியர் கறிவாங்குவதற்குச் சந்தைக்கும், சாஸ்திரியார் சாப்பிடுவதற்கு இலைஎடுப்பதற்கும் சென்றுவிட்டனர்.

சங்கீதஆசிரியர் நெருப்பைமூட்டி அரிசியைக்கழுவி அடுப்பில் வைத்தார். அரிசியும் கொதிக்கவேண்டிய நேரத்திற்குக் கொதிக்கத் தொடங்கியது. அரிசி கொதிக்கும் சத்தம் கொத, கொதஎனச் சத்தத்தை உண்டுபண்ணியது. அந்த ஓசை ஆசிரியனுக்கு இன்பம்தந்தது. உடனே இருதடிகளைஎடுத்துச் சோற்றுப்பானையில் மெய்மறந்து "ததிகிட ததிகிட தத்தனுங்கிட தளாங்கிடத்தோம்" என்று பானையில் ஓங்கி அடிக்கவேப்பானைநொருங்கியது. இது கண்ட ஆசிரியன் தவறைஉணர்ந்து கவலையுடன் இருந்தார்.

இப்படி ஈங்கிருக்கத் தயிர்எடுக்கச் சென்ற ஆராய்ச்சியாளர் தயிர்எடுத்துவரும்வழியில் ஆராய்ச்சிபண்ணத்தொடங்கித் தயிருக்கு ஆதரவு பானை, பானைக்கு ஆதரவு கயிறுஎன்றால் கயிற்றுக்கு ஆதரவு என் கை, ஆகவே கைக்குஆதரவு நான், எனக்கு ஆதரவு பூமி, ஆகவே இப்பானைக்கும் பூமிஆதரவுதானேஎனக் கையைவிடவே தயிர்ப்பானை பூமியில் விழுந்து சுக்குநூறானது. இதுகண்ட ஆராய்ச்சிநிபுணர் தவறைஉணர்ந்து கவலையுடன் மீண்டார்.

இஃது இப்படியிருக்கக் கறிவாங்கச்சென்ற வைத்தியர் ஒருவருத்தத்தையும்தராத மீனைத் தேடினார். ஆனால், சந்தையில் வந்திருந்த மீன்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வருத்தத்தைக் கொண்டுவருவதாய் இருந்தமையால் மீன்வாங்காது மரக்கறிக் கடைக்குச்சென்றார். அங்கு வந்திருந்த காய்வகைகளும் வருத்தம்தருவனவாய் இருந்ததினால் ஒன்றும் வாங்காமல் மீண்டார்.

இவர்கள் இப்படிஇருக்க இலை எடுக்கச்சென்றவர் என்ன ஆனார். இவர் சென்ற வாழைத்தோட்டத்தில் சின்னவாழைகளில் இலைஎடுக்க முடியாமல் போகவே ஓர்பெரிய வாழைமரத்தில்ஏறினார். அரைவாசியில் ஏறிக்கொண்டிருக்கும்போது எங்கிருந்தோ ஓர்பல்லிசொல்லியது. இவர்சாஸ்திரியார் ஆனமையால் உடனே அதிலிருந்து சாஸ்திரம் பார்த்தார். அந்தப்பல்லி சொற்பலன் வாழைமரத்தின்மேல் இனிமேல் ஏறினாலும் ஆபத்து, கீழே இறங்கமுற்பட்டாலும் ஆபத்துஎன்று இருந்தது. சாஸ்திரியார் ஒன்றும்செய்யமுடியாமல் வாழைமரத்தில் இறுகக்கட்டிப் பிடித்தவண்ணமிருந்தார். சாஸ்திரியார் இப்படி இருக்க மற்றமூவரும் வந்துசந்தித்துத் தமது கெட்டித்தனங்களைச் சொல்லிக் கவலையுடன் இருக்கும்போது இலைக்குப்போன சாஸ்திரியாரின் ஞாபகம் வந்தது. உடனே

(அடுத்தபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரும் வாழைத்தோட்டத்தில் சென்றுதேடியபோது வாழைமரத்தில் அவர் ஏறியபடி இருப்பதைக் கண்டதும் என்னநடந்ததென விசாரிக்கச் சாஸ்திரியார் நடைபெற்றயாவையும் விளக்கினூர். அதனால்அம் மூவரும் பரிதாபப்பட்டுப் பெரிதும் ஆலோசனையில்—பசியுடன்இருந்து, ஈற்றில் ஓர்மூடிபுக்குவந்து சாஸ்திரியாரிடம்சென்று இறங்காமல் அப்படியே கையைவிடும்படி கூறினூர்கள். சாஸ்திரியாரும் அப்படியேசெய்யத் படாரெனக் கீழே விழுந்ததினால் எழுந்துநடக்கமுடியாத நிலைஏற்பட்டது. மற்றமூவரும் தங்கள் மடமைத்தனத்தை உணர்ந்து சாஸ்திரியாரைச் சுமந்துகொண்டு ஊருக்குப் புறப்பட்டனர்.

---

**விடைகள் :**

(1) அந்தோனியார் — ஸ்துதியர்
(2) அத்தனூசியார் — வேதபாரகர்
(3) அகுஸ்தினூர் — ,,
(4) செபஸ்தியார் — வேதசாட்சி
(5) மத்தியாஸ் — அப்போஸ்தலர்

---

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் திருநாள்: கிழக்குத்தேசங்களிலே வேதபோதக அலுவல்கள் பெருமளவில் நடத்தும்படியாக அர்ச். சவேரியாரை அனுப்பிவைக்கக் காரணரானவரும், உலகெங்குஞ்சென்று வேதபோதகங்கள்செய்ய யேசுசபையை அடியிட்டவரும், திரிகோணமலை மேற்றிராசனத்தின் பாதுகாவலருமான அர்ச். இஞ்ஞாசியாரின்திருநாள் 31-7-57புதன்கிழமை விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

திருநாளன்று அர்ச். இஞ்ஞாசியாரின் பெயர்கொண்ட மகாவந். நமது மேற்றிராணியாண்டவர் அவர்களால் காலை 6 மணிக்குப் புளியந்தீவு, அர்ச். மரியநாயகிஆலயத்தில் திவ்வியபூசை நிறைவேறியது. பூசைக்கு மட்டக்களப்புநகரிலுள்ள கத்தோலிக்கபாடசாலைகளிற் கல்விபயிலுஞ்சிறுவர்சிறுமிகளும், ஆசிரியர்களும், மற்றும் விசுவாசிகளுமாகத் திரளானோர் சென்று பூசைகண்டு அவரதுகருத்துகள் நிறைவேறுமாறு திருவிருந்தருந்தி ஒப்புக்கொடுத்தார்கள். அன்றுமுழுநாளும் திரிகோணமலைமேற்றிராசனத்தில் அடங்கிய பாடசாலைகளுக்கெல்லாம் விடுமுறைநாளாயிருந்தது.

தாண்டவன்வெளி பரிசுத்தவியாகுலமாதா ஆலயப் பங்கிலுள்ள கிளெனி ஆண், பெண்பாடசாலை மாணவர்மாணவிகள் தத்தம்ஆசிரியர்களின் உதவியுடன் திருநாளுக்கு முந்தியநாள் 30-ந் திகதி பி. ப. 3-30 மணியளவில் திருநாள்நாயகரைச் சந்தித்துத் திருநாட்சுபசோபனம் கூறினர். பின்னர் ஞானப் பூச்செண்டுகளை அன்பளிப்பாகச் சமர்ப்பித்து ஆசீர்பெற்று மீண்டனர்.

4-8-57 ஞாயிற்றுக்கிழமை அர்ச். இஞ்ஞாசியார்திருநாள் தாண்டவன்வெளி பரிசுத்தவியாகுலமாதா ஆலயத்தில் கொண்டாடப்பட்டது. அன்று காலை பங்குவிசாரணைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமிகள் அவர்களால் இருபூசைகள் நிறைவேறின. இரண்டாம்பூசை பாடற்பூசையாக நிறைவேறியது. "அர்ச். இஞ்ஞாசியாரும், யேசுசபையும்" என்பது பற்றிச் சுவாமியவர்கள் இருபூசைகளிலும் அரியபிரசங்கங்கள் நிகழ்த்தினூர். விசுவாசிகள் அனைவரையும் மகாவந். மேற்றிராணிஆண்டவரின் கருத்துக்கள் நிறைவேறும்படியாகப் பிரார்த்தித்துத் திருவிருந்தருந்தி ஒப்புக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். பூசையின்பின், அர்ச். இஞ்ஞாசியாரின் சுத்த மானவஸ்து முத்திசெய்ய விசுவாசிகட்குக் கொடுக்கப்பட்டது. பி. ப. 5மணியளவில் திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்தின்போது விசேடசெபங்கள்செய்து நமதுமேற்றிராசனத்தின் வளர்ச்சிக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டன.

மூன்ருவதுவருட ஞாபக தினம்: பத்து ஆண்டுகளாக எம் பங்குவிசாரணைக்குரவராயிருந்த வண. எஸ். லாசறஸ் சுவாமியவர்கள் தேகவியோகமான மூன்ருவதுவருடஞாபக தினம் இம்மாதம் 5-ந் திகதி வாலாயிற்று. அன்று பங்குஆலயத்தில் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமிகளால் காலை 6 மணியளவில் அன்னாரின் ஆத்துமஇளைப்பாற்றிக்காகத் துக்கப்பாடற்பூசை நிறைவேறியது. விசுவாசிகள் பூசைகண்டு திருவிருந்தருந்தி அன்னாரின்ஆத்துமஇளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுத்தனர். அன்றுகாலை 8 மணியளவில் ஆண், பெண்பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்மாணவிகளும், ஆசிரியர்களும் செபமாலைசொல்லி ஒப்புக்கொடுத்தார்கள்.

— நிருபர்

## கோவில் கட்டிய ஐஸ்வரியவான்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

"அப்படியானூல், ஏன் உன்பெயர் அதில்தோன்றவேணும். இந்தநேர்த்தியானகோவில் கட்டுவதற்கு நீஏதாவது செய்துவிட்டாயோ? என்றான். "அப்படி நான் யாதொன்றுஞ் செய்யவில்லை ஐயா; ஆனூல், நானும் ஏதோசொற்ப உதவிசெய்தேனென்றிருக்கட்டுமென்று கல்லேற்றிக்கொண்டுபோகிற குதிரைகளுக்கு நித்தம் ஒருபிடிபச்சைப் புல் கொடுத்ததைத் தவிர வேறொன்றும் நான்செய்யவில்லை ஐயா" என்றாள். "அப்படியானூல், என்பெயருக்குப்பதிலாய் உன்பெயர் அதில்காணவேண்டிய காரணமென்ன? சொல். கோவில் கட்டடத்துக்கு வேண்டிய செலவெல்லாம நான்செய்யவில்லையா" வென்று சினந்துகூறினூன். அப்பொழுது சுவாமியார் ஐஸ்வரியவானைநோக்கி: "ஆ! இது ஆச்சரியந்தான் நமது ஆண்டவர் உம்முடைய உதவியைவிட இந்த ஏழைமனுஷியின் உதவியைத்தான் அதிகமாய்ப் பாராட்டுகிறுரென்று இதிலேவெளியாகிறது" என்ருர்.

---

## விளையாட்டுக்கோஷ்டிக்கு விபத்து

திரிகோணமலை உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாண உதைபந்தாட்டக்கோஷ்டிக்குமிடையேசென்ற ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் திரிகோணமலையில் நடைபெறவிருந்த உதைபந்தாட்டப்போட்டியானது, யாழ்ப்பாணக்கோஷ்டிக்கு முதல்நாள்இரவுஏற்பட்ட விபத்துக்காரணமாகப் பின்போடப்படலாயிற்று. அன்றிரவு யாழ்ப்பாணக்கோஷ்டியினர் ஒருவானில் திரிகோணமலையைநோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, அங்கிருந்துபதினொரம்மைலில் ஓர்எருமையின்மேல் வான்அகஸ்மாத்தாய் மோதுண்டு புரண்டமையால் அவர்கள் விபத்துக்குள்ளாகிக் காயமடைந்தனர். இவர்களில் மூவருக்குக் கடுமையான வெட்டுக்காயங்கள் ஏற்பட்டமையால் திரிகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். ஏனையோருக்குச் சாதாரணகாயங்களே ஏற்பட்டன.

* * *

● போலாந்தின் திருச்சபை மேலதிகாரியான கருதினூல் விசின்ஸ்கி ஆண்டவர் கம்யூனிஸ்தார்களால் சிறைவைக்கப்பட்டிருந்தபோது, "வைகாசி மாதத்துக்குரிய தியானங்கள்" எனும் நாமத்துடன் புதிய புத்தகம்ஒன்றை எழுதலாயினர். நாளுக்கு ஒன்ருக 31 அத்தியாயங்களைக்கொண்ட இப் புத்தகம் போலிஷ்பாஷையிலே விரைவில் பிரசுரமாகவிருக்கின்றது.

---

## மரண அறிவித்தல்

யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச் சங்கம் லிமிற்ரெட்

இல. 4, கண்டி ரோட், யாழ்ப்பாணம் — பதிவு இல. M. 110

கீழ்க்காணும் மேற்படி சங்க அங்கத்தவர்கள் மரணத்திரையினுள் மறைந்ததை மிகவும் விசனத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்ரேம். இறந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மரணசேவைப் பணத்தைச் செலுத்தவும்.

இறந். இல. 1654 இறந். பெயர்: சுப்பிரமணியம் மீனும்பாள்
விலாசம்: 37/5 வயிரவகோவில் ஒழுங்கை, இராசாவின்தோட்டம் ரோட். திகதி: 3-8-57

● ● ●

இறந். இல. 288. இறந். பெயர்: சின்னக்குட்டி கைம்பெண் சின்னப்பிள்ளை
விலாசம்: நந்தாவனம், வேம்படிரோட். திகதி: 6-8 57

த. இராசரத்தினம்,
கௌரவ காரியதரிசி

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 10095

யாழ்ப்பாணம் [illegible]ஸ்திறிக்கோட்டில்
கோ[illegible]டாவில்
ஆறுமுகம் [illegible]மயில்வாகனம்
பெண் [illegible]ணரெட்டினம்
— வழக்காளிகள்.
எதிராக
திருநெல்வேலிவடக்கு
கந்தையா ஆனந்தநடராசா
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 10095-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1957-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 14-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1113-உம், இன்னும் ரூபா750-க்கு 2-7-53 தொடக்கம் 12-7-56 வரையும் ரூபா 100-க்கு 8%வட்டியும், பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரைக்கும் 5%வட்டியும், கோட்டுச்செலவு 190ரூபா 50சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்கோவிற்பற்றுக் சொக்குவில்இறை, "காலிங்கராயன்புலம்" கி. ப. 10 குளி 10-உம் பனைகளும், மேற்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும். எல்லை: கிழக்கு— நாகமணி சுவாமிநாதருக்கும், வேலுப்பிள்ளை கந்தையாவிற்கும், வேலுப்பிள்ளை ஆசைப்பிள்ளைக்கும், குழந்தை செல்லையாவிற்குமுரியஆதனங்களும், ஒழுங்கையும். வடக்கும் மேற்கும் பண்டாரம் சின்னப்புவின் ஆதனம். தெற்கு— ஒழுங்கை. இது அடங்கலிலும் இதற்குச் சேர்ந்தவைகளிலும் சொரியலாய் அரைவாசி.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம், 5-8-19[illegible]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 449

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
அச்சுவேலிதெற்கு
சூசை அந்தோனி — வழக்காளி
எதிராக
அச்சுவேலிவடக்கு
(1) கந்தன் சின்னத்துரையும்
(2) பெண் சின்னத்தங்கமும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 449-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1957-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 17-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2583/30-உம், இன்னும்ரூபா2000-த்திற்கு 29-8-55 தொடக்கம் 20-10-55 வரைக்கும் 100-க்குப் 10%வட்டியும் பின்கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரைச்கும் 100-க்கு 5%வட்டியும், செலவு ரூபா 206-50-உம். இதில் முதல்வட்டியில் ரூபா 1200-உம், கோட்டுச்செலவில் ரூபா 150-உம்கழித்து மீதம்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி, அச்சுவேலி கோயிற்பற்று, அச்சுவேலிவடக்கிறை "வரம்பிட்டபுலம்" கி. ப. $8\frac{1}{2}$. இதில் தெற்குப்பக்கமாக $4\frac{1}{4}$ பரப்பும், பனைகளும், தென்னைகளும். இந்த $4\frac{1}{4}$ பரப்புக்கும் எல்லை [illegible]க்கு — சின்னப்பு சின்னத்துரைக்[illegible]ங்காளருக்கும் உரிய ஆதனம். [illegible]கு — சந்தன் முருகனின் ஆதனம். [illegible]ற்கு — கந்தன் சின்னத்தம்பிக்கும், மறுபேருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு — கேணியும், இராமலிங்கம் கனகரெத்தினத்தின்உரிமைக்காரருக்கும், பங்காளருக்கும் உரியகாணி. இதடங்கலும் வடக்கேஇருக்கும் கிணற்றில்பங்கும், வழிவாய்க்காலுரித்தும், வடக்கேஉள்ள ரோட்டிலிருந்து போக்குவரவுசெய்ய நிச்சயிக்கப்பட்ட வழிஉரித்தும்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம். 5-8-57

---

## இரக்கத்தின் பெருக்கம்

எமது பாடசாலையில் G. C. E. P. வகுப்புத்தொடங்கி அதற்கு அங்கீகாரம் பெறுவதற்காக எங்கள்அன்னையிடம் மன்ருடிவந்தோம். யேசுவின் திருஇருதய இரக்கத்தினூலும், பாத்திமாநாயகியின் பரிந்துபேசுதலாலும், அர்ச். தீத்தம்மாள், அர்ச். பத்தாம்பத்திநாதர், எமதுஅரிய பிதா மகாவந். கியோமார் ஆண்டவர் அவர்களின் மன்ருட்டினூலும் இருந்ததடைகள் நீங்கிப் புதுமையாக அங்கீகாரம்கிடைத்துவிட்டது. நேர்த்தியின்படி மகாவந். கியோமார் ஆண்டவர் அவர்களுக்கு 9பூசைகள்வைத்துப் பிரசுரமும்செய்கிரேம்.

பாத்திமாமாதாவே வாழ்க!

G. C. E. P. வகுப்பு மாணவிகள்,
பண்டைத்தரிப்பு.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பலவருடகாலமாக என்னை வருத்திய வியாதி அர்ச். அந்தோனியாரின்உதவியால் சுகமாயிற்று.

தா. மேரிசெபஸ்தியானுள்.

* * *

அர்ச். தேவமாதாவினுடையவும், அர்ச். அந்தோனியாருடையவும் அருளினூல் நான் 6வருஷகாலமாக மன்ருடிக்கேட்ட விண்ணப்பம் அனுகூலமாயிற்று. இன்னும் எனதுவேண்டுதல்கள் நிறைவேற மன்ருடும்படி சபையாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கரவெட்டி ஓர்பக்தன்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 8-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org